AstroVed

மாலை: 1

# சத்வித்யா

மலர்: 22

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

இணையதளம் வாயிலாக மாதம் ஒரு முறை வெளிவரும்

ஆன்மீக விஞ்ஞான இதழ்



## ஆடியைக் கொண்டாடும் பவானி அம்மன்

- ★ வியப்பூட்டும் மகான்கள் !
- ★ தண்ணீரில் எரிந்த விளக்கு !
- ★ தொல்லைகளிலிருந்து விடுதலை பெற
- ★ நீலிகை ரகசியம்

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்

மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com

AstroVed

# சத்வித்யா



போன ஜென்மத்தில் நாம் என்ன செய்து கொண்டிருந்தோம் என்ன நினைத்துக் கொண்டிருந்தோம் என்பதை அறிவதும் அறிவியல் தான்! நினைவுத் திறன் அதிகமாக பரப்ப பட்டதாக இருந்தால் தான் நமது முற்பிறவி பற்றி அறிய முடியும். புத்தர், கடவுளே இல்லை என்றவர் ஆனால் முற்பிறவி என்பது உண்டு என நம்பினார். ஒரு விளக்கை ஏற்றினால், அதைக்கொண்டு அடுத்தது அதிலிருந்து இன்னொன்று என பல விளக்குகளை தொடர்ச்சியாக ஏற்ற முடியும். இப்படித்தான் கடந்து போன பிறவியின் நினைவுகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆகையால் தான் பல பிரச்சனைகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அடுத்து ஏற்ற முடியாமல் ஒரு விளக்கு அனைவதைப் போல் நமது மூளை முற்பிறவி நினைவுகளை எப்போது மறந்து, புதிய சிந்தனை பிறக்கிறதோ அப்போது தான் நமது பிரச்சனைகள் மறந்து புதிய வாழ்கை, புதிய பாதை பிறக்கும்.

Dr. Baskaran Pillai

அன்பு சத்வித்யா வாசகர்களே! அம்மன் மாதம் என போற்றி வணங்கப்படுகின்ற ஆடி மாதம் பிறந்து விட்டது. ஆலயங்களிலே கூடி, மக்கள் வழிபடத் தொடங்கிவிட்டனர். இயற்கையின் வரமாய் மழை பொழிவும் சிறப்பாக இருப்பதனால் ஆடிப்பட்டம் தேடி விதைக்க உழவர்கள் தயார் நிலையில் உள்ளனர். ஆடிப் பெருக்கை எதிர் கொள்ள ஆறுகள் மணல் விரித்து காத்துக் கொண்டிருக்கின்றன. இனி அனைத்தும் நலமுடன் விளங்கும்; பொலிவான எதிர்காலம் துலங்கும் என்ற நம்பிக்கை மக்கள் மனதிலே துளிர்விடத் துவங்கியுள்ளது!



பட்டதெல்லாம் போதும் பகவானே! இனி எத்தனை அலைகள் வந்தாலும் கரையை மோதி அத்தனையும் அழிந்து போகட்டும்! "எங்களுக்கு ...அம்மனே நீதான் காப்பு!" என அகமகிழ்ந்து ஆடிப்பாடி, அன்பை விதைத்து, அறநெறி தவறாமல் வாழ்வோம்!

அன்புடன்
(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

# திருஞான சம்பந்தருக்கு முத்துச் சிவிகை தந்த தலம்

திருஞான சம்பந்தர் கொடிக்களம் அருள்மிகு தீர்த்த புரீஸ்வரர் திருக்கோயிலுக்கு தேவார திருப்பதிகம் பாடவும், சுவாமி தரிசனம் செய்வதற்காகவும் தம் அடியார்களோடு வருங்காலத்தில் முதற்கண் மாறன்பாடி என தேவாரத் திருமுறையில் சொல்லப்படுகின்ற தற்போது இறையூரில் இனிதே எழுந்தருளி இருக்கின்ற அருள்மிகு தாகம் தீர்த்த புரீஸ்வரர் திருக் கோயிலில் சுவாமி தரிசனம் செய்து, இத்தலத்திலேயே தங்குகிறார் திருஞான சம்பந்தர்.

அன்றிரவு சர்வேஸ்வரன் மகிழ்ந்து திருஞான சம்பந்தருக்கும் அவரது அடியார்களுக்கும் அமுது



படைத்ததோடு அவர்களது தாகத்தை போக்கினார்.

அதனால் இத்தல இறைவனுக்கு தாகம் தீர்த்த புரீஸ்வரர் என்ற திருப் பெயர் எழுந்தது. அமுது படைத்த காரணத்தால் இத்தல இறைவிக்கு அன்னபூரணி என்ற திருப்பெயர் அமைந்தது.

இத்தலம் சென்னையிலிருந்து உளுந்தூர் பேட்டை விருத்தாசலம் வழியாக பெண்ணாடம், தொழுதூர் விருத்தாசலம்  சாலையில் தொழுதூரிலிருந்து 20 கிலோமீட்டர் தொலைவிலும், கடலூர் விருத்தாசலம் வழியாக பெண்ணாடம் நகர் அருகே அதாவது பெண்ணாடம் புகை வண்டி நிலையத்திலிருந்து 4 கிலோமீட்டர் தொலைவிலும் மாறன்பாடி எனப்போற்றப் பெறும் இறையூரில் அருள்மிகு தாகம் தீர்த்த புரீஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது.

திருஞான சம்பந்தர் கொடிக்களம் என்னும் பகுதியில் அமைந்துள்ள தீர்த்த புரீஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பதிகம் பாட வருகை தர உள்ளதை அறிந்த ஈசன் அகமகிழ்ந்து மறுநாள் காலை வேத விற்பன்னர்களை அனுப்பியதோடு, திருஞான சம்பந்தர் கேட்காமலேயே அவருக்கு முத்து சிவிகை (முத்துப்பல்லக்கு) தந்து வேத மந்திரங்கள் முழங்க நாத நல்லிசையோடு அழைத்துவர செய்தார். திருஞான சம்பந்தருக்கு முத்துச் சிவிகை, முத்துக்குடை மற்றும் சிவச்சின்னங்களை கேட்காமலேயே அருளியவர் இத்தல ஈசன்.
இத்தல இறைவனின் திருப்பெயர் அருள்மிகு ஆனந்தீஸ்வரர், அரத்துறை நாதர். அம்பிகை ஆனந்த

நாயகி அருள்மிகு திரிபுர சுந்தரி, அரத்துறை நாயகி என சிறப்பு பெயர்களால் அழைக்கப்படுகின்றார்கள். தல தீர்த்தம் நீவா நதி தல விருட்சம் ஆலமரம்.

நடுநாட்டுத் திருத்தலங்களில் முதன்மையான திருத்தலம். திருநெல்வாயில், அரத்துறை, திருவரத்துறை, திருவருட்டுரை என்று பக்தியுடன் அழைக்கப்பெறுகின்ற மிகப் பழமையான அற்புத சிவத்தலம். திருஞான சம்பந்தர், அப்பர் என்று அழைக்கப்பெறுகின்ற திருநாவுக்கரசர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோரால் தேவாரம் பதிகம் பெற்ற சிறப்பு வாய்ந்த சிவத்தலம்.
இத்தல தீர்த்தத்தில் குளித்து, முன்னோர்களின் பாவங்கள் விலக வழிபட, ஏற்ற தலம். பிதுர்கடன் செய்வதற்கும் சிறப்பு வாய்ந்த தலம்.

நம் முன்னோர்களின் ஆசிகளும் கிடைக்க உதவும் உன்னத தலம் அகத்தியர் முதல் தேவர்கள் முனிவர்கள் தெய்வங்கள் வழிபட்ட அரிய பெரிய சிவத்தலம்.
இந்த கொடிக்களம் ஸ்ரீ தீர்த்த புரீஸ்வரர் திருக்கோயில் தொழுதூர் - விருத்தாசலம் பேருந்து சாலையில் தொழுதூரிலிருந்து 20 கிலோமீட்டர் தொலைவிலும், கடலூர் பெண்ணாடம் சாலையில் கொடிக்களம் என்னும் ஊரில் அற்புதமாக எழுந்தருளிய அருள்மிகு தீர்த்த புரீஸ்வரர் என்ற திருப்பெயருடன் இராஜ கம்பீரத்துடன் அருள் பாலித்துக் க்கொண்டிருக்கிற அழகே அழகு.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்



உங்கள் இல்லத்தில் வைதீக/ஆகம முறைப்படி யாகங்கள் மற்றும் சத்ய நாராயண பூஜை போன்ற அனைத்து பூஜைகளும் செய்து தர அணுகவும்

www.priestservices.com
போன்: 88702 88701

# “தண்ணீர் விட்டான் கிழங்கு”

சித்தர்கள் நமக்கு அடையாளம் காட்டிய எத்தனையோ இயற்கை மூலிகைகளில் ஒன்று தான் இந்த தண்ணீர் விட்டான் கிழங்கு சாதாரணமாக வேலி ஓரங்களில் காணப்படும் கொடி வகையை சார்ந்தது இந்த மூலிகை

மூன்று அல்லது நான்கு கொடிகள் மட்டுமே வேலியில் படர்ந்திருக்கும் அதன் வேரை தேடி நாம் கண்டெடுத்து தோண்டினால், உள்ளே நமக்கு பிரம்மிப்பை ஏற்படுத்தும் வகையில் மூட்டை கட்டும் அளவிற்கு கிழங்குகள் கிடைக்கும்.

தண்ணீரே இல்லாத இடத்தில் கூட வளரும் இந்த கிழங்குகள் நீள நீளமாக கற்றை போல் காணப்படும். இதனை எடுத்து வெயிலில் காயவைத்தால் இதிலுள்ள தண்ணீர் முற்றிலுமாக வற்றி சருகு போல் ஆகிவிடும். இதனால் தான் இந்த கிழங்கிற்கு தண்ணீர் விட்டான் கிழங்கு என்னும் பெயர் வந்தது என்பதை அறியலாம்.

### குணமாக்கும் நோய்கள்:

சர்க்கரை நோய் எனப்படும் நீரிழிவு நோய், வெட்டை சூடு, உடல் உஷ்ணம், இரும்பு சத்து குறைவால் ரத்தம் பாதிப்படைந்து வெளிறிய உடல், இப்படி பலதரப்பட்ட உடல் நோய்களை குணப்படுத்தும் ஆற்றல் இந்த தண்ணீர் விட்டான் கிழங்கு என்னும் மூலிகைக்கு உண்டு

இதன் சூரணம் நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும் தேன் அல்லது பாலில் கலந்து பயன்படுத்தலாம். சதாவாரி என்னும் பெயரில் இது ஆயுர்வேத மருந்தாகவும் கிடைக்கிறது. தகுந்த முறையில் இதனை பயன்படுத்தி, நீரிழிவு என்னும் கொடிய நோயிலிருந்து காத்துக் கொள்ளலாம்.

இறைவனால் படைக்கப்பட்டு, சித்தர்களால் அடையாளம் காட்டப்பட்ட இந்த மூலிகையை பயன்படுத்தி நல்வாழ்வு பெறுவோம்.



~ ரா. பன்னீர்செல்வம்

# இராமுடு சாமியார் !
# மறைந்தும் மறையாத மகான்கள்.

பாரதமே ஞான பூமிதான் மெய்ஞான அடியார்கள் வாழையடி வாழையாக வருகை தந்து கொண்டே இருக்கிறார்கள். இவர்கள் அத்துணை பேருமே ஞான ஆலயங்கள்...

இமயம் முதல் குமரி வரை அருளாளர்கள் காலந்தோறும் அவதரித்து வருகின்றனர்... அவர்களின் அருந்தவமே நம்மையும் காத்து வருகிறது.

நம் புறக்கண்களுக்கு அவர்களின் தரிசனம் தெரியாமல் இருக்கலாம்.

தோற்றத்தில் சாதாரணமாக இருப்பார்கள் மறைந்தும் மறையாத மகான்கள் வரிசையில் ஓர் அற்புத மகானைப் பற்றி இறையருளால் அறிந்து கொள்வோம்.

கடலூர் மாவட்டத்தின் தலை நகர் கடலூரில் - கடலூர் முதுநகர் என்னும் பகுதியில் ஒரு மகான் உலா வந்து கொண்டிருந்தார்.

சுவாமிகளின் பெயர் இராமுடு சாமியார் சிவந்த நிறம் - அழுக்கடைந்து போன உடம்பு - கோவணமே ஆடை அவர் குளித்து பார்த்ததில்லை. குளிக்காமல் எவ்வளவு மாதங்கள் ஆனாலும் அவர்மீது துளி கூட துர்நாற்றம் வீசாது. சந்தன மணம் அவரிடமிருந்து வெளிப்படும்.



கடலூர் முதுநகரில் அருள் மிகு குமரக் கோயிலில் - சுற்றுப் பிரகார ஓரத்தில் சுவரை பார்த்தபடி படுத்திருப்பார். யாரையுமே திரும்பி பார்க்க மாட்டார். எப்போதாவது யாராவது உணவு கொடுத்தால் இரண்டு கைகளால் வாங்கி உண்டுவிட்டு தலையில் தடவிக் கொள்வார் தண்ணீர் குடிக்க மாட்டார். கடைவீதி வழியாக - குமரக்கோயில் தெருவில் காலை, மாலை இரு வேளைகளிலும் நடப்பார்.

யாரிடமும் எதையும் கேட்பதோ, பேசுவதோ கிடையாது. தெருவில் அவரை கேலி பேசுவதும், அவருடைய கோவணத்தை பிடித்து இழுப்பதும் - அவரை ஏளனமாக பார்த்து சிரித்து கிண்டல் செய்வதுமாக இருப்பார்கள் - சிலர் அவரை ஊமை சாமியார் என்றும் சிலர் அழுக்கு சாமியார் என்றும் வெறுப்பேத்துவர்.

இராமுடு சாமியார் திரும்பிக் கூட பார்க்க மாட்டார். எவரிடமும் கையேந்த மாட்டார்.

எத்தனையோ பேர் வாழைப்பழம் உணவுகள் கொடுக்க முயற்சி செய்வார்கள் அவர் அலட்சியமாக சிரித்தபடி போய் விடுவார்.

அவராகவே சிலர் கடைகளில் அமர்ந்து விட்டால் போதும் அதிலும் எதையாவது சாப்பிட்டுவிட்டால் போதும் அன்றைய தினம் அந்தக் கடைகளுக்கு அமோக வியாபாரம் நடைபெறும்.

அவர் அமர்ந்த இடங்கள் இன்று பெரிய பெரிய கட்டங்களாக உள்ளன.
அப்படிப்பட்ட இராமுடு சாமியார் நன்றாக பேசுவார் ஒரே ஒருவரிடம் மட்டுமே பேசுவார். அதிலும் அந்த சிறுவனிடம் மட்டுமே பேசுவார்.

அந்த சிறுவன் எடுத்து வரும் சாப்பாட்டை மட்டுமே சாப்பிடுவார்.
தாத்தா தாத்தா என்று பாசமுடன் பழகும் அந்த பையனுக்கு இராமுடு சாமியார் நிறைய ஆன்மீக கதைகள் சொல்லுவார். நிறைய விஷயங்கள் கற்றுக் கொடுத்தார். அந்த பையன் உள்ளத்திலேயே தங்கி விட்டார்.

குமரக் கோயிலில் காலத்தை கழித்துக் கொண்டிருந்த இராமுடு சாமியாரை அந்த பையன் அந்தக் குமரக் கோயில் தெருவில் இருக்கும் வீட்டிற்கு இராமுடு சாமியார் சென்றார் யார் வீட்டிற்கும் செல்லாத இராமுடு சாமியார் அந்த பையன் வீட்டிற்கு சென்று அந்த பையன் வீட்டார் கொடுத்த உணவை சாப்பிட்டு விட்டு இரண்டு கைகளையும் உயர்த்தி, பையனின் குடும்பத்தாருக்கு ஆசி வழங்கி சென்றார்.
பல ஆண்டுகள் அந்த பையனிடம் நட்பு பாராட்டிய அந்த இராமுடு சாமியார் பிறகு எங்கு போனார் என்று தெரியவில்லை.
இராமுடு சாமியாரின் ஆசியால் பாழடைந்து போன அந்தக் கோயில் அழகாக புதுப்பிக்கப்பட்டு உள்ளது. அவர் நடமாடிய அந்த தெரு மிகவும் சிறப்பாக உள்ளது.
அந்த பையன் வீடும் பன்மடங்கு உயர்ந்து உள்ளது. அந்த பையன் ஆன்மீகத்தில் சிறந்து விளங்குகிறான் அந்த பையன் தான் அடியேன்.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்



KABA SURA KUDINEER
15 herbs effective against Viral infections, fever, cough and breathing difficulties
Call: 88702 88701

# தொல்லைகளிலிருந்து விடுதலை பெற.

நமது மந்திர மகிமை பகுதியில், அன்னையின் அழகினை பறைசாற்றும் சௌந்தர்ய லஹரியின் பாடல்கள் ஒவ்வொன்றும் மந்திர சக்தி வாய்ந்தவை என்பதனை பார்த்து வருகிறோம்.
அந்த வகையில் மனிதர்களின் அன்றாட வாழ்வில் ஏற்படும் "தொல்லைகளிலிருந்து விடுதலை பெற" உதவுகின்ற மந்திரப் பாடலின் மகிமை பற்றி அறிந்து கொள்வோம்.

### மந்திரப் பாடல்:

"ஸீதா ஸிந்த்தோர் - மத்த்யே ஸீரவிடபி - வாடீ - பரிவ்ருதே மணித்விபே நீபோபவனவதி சிந்தாமணி க்ரு: ஹ
சிவாகாரே மஞ்சே பரமசிவ - ப்ரியங்க - நிலயாம்
பஜந்தி த்வாம் தன்யா : கதிசன சிதானந்த லஹரீம்"

### பாடலின் பொருள்:

அமுதக் கடல்; அதன் நடுவே கற்பகத் தருக்களின் சோலை என்னும் ரத்தினத்தீவு! பல வித சுகந்த மணம் வீசும் மரங்கள் சூழ்ந்த சிந்தாமணி இல்லத்தில் பரமசிவனின் மடியில் வீற்றிருக்கும் ஞானானந்தக் கடலின் அலையே! உன்னை வழிபடுவோர் புண்ணியவான்களாய் இருப்பர்! அவர்களின் தொல்லைகளை விலக்கு தாயே!

### பிரயோகிக்கும் முறை:

வெள்ளித்தட்டில் சந்தனத்துடன் குங்குமப்பூவை கலந்து அரைத்து, அந்த சாந்தினை பரப்பி, இந்த மந்திரத்திற்கான யந்திரத்தை அதில் வரைய வேண்டும். நல்லெண்ணெய் தீபம் ஏற்றி வைத்து, பூஜை செய்ய வேண்டும்.
தினமும் 1008 முறை வீதம் 16 நாட்கள் வடக்கு முகமாக அமர்ந்து இந்த மந்திரத்தை ஜபிக்கவும்.
சிவப்புநிற மலர்களைக் கொண்டு, துர்கா அஷ்டோத்தர அர்ச்சனை செய்தல் நலம்!
மிளகு சாதத்துடன், வெல்லப்பாயசமும் தேங்காயும் வைத்து நைவேத்யம் செய்ய வேண்டும்.
மேற்கண்ட முறைப்படி நைவேத்யம் செய்து இந்த மந்திரத்தை சரியாக ப்ரயோகம் செய்தால் நமக்கு ஏற்படும் சகலவிதமான தொல்லைகளிலிருந்தும் விடுபட்டு, நிம்மதியான வாழ்வினைப் பெறலாம்.
அன்னை அருள்வாள்!

~ ரா. பன்னீர்செல்வம்

# ஆஷாட நவராத்திரியும், வாராஹிஅம்மன் அருளும்!!

இந்து மதத்தில் பெண் தெய்வங்களை போற்றும் விதமாக நவராத்திரி வழிபாடுகள் நடை பெறுகின்றன. பருவ காலங்களுக்கு ஏற்ப ஒன்பது நாட்களை நவராத்திரிகளாக கொண்டு சக்தி தெய்வங்களை வணங்குவது வழக்கத்தில் உள்ளது. வருடத்தின் ஒவ்வொரு மாதத்திலும் வரும் அமாவாசை முதல் நவமி வைரயிலான திதிகள் அம்பிகைக்கு ஏற்றைவயாகும். பன்னிரண்டு மாதங்களுக்கு பன்னிரண்டு விதமான நவராத்திரிகள் உண்டு என்கின்றன சாஸ்திரங்கள். அந்த பன்னிரண்டிலும் மிக முக்கியமானைவ நான்கு நவராத்திரிகள்.




### நான்கு விதமான நவராத்திரிகள்:

வசந்த காலத்தில் கொண்டாடப்படுவது வசந்த நவராத்திரி.
(பங்குனி மாத அமாவாசை முதல் ஒன்பது நாட்கள்)
ஆனி மாதத்தில் கொண்டாடப்படுவது ஆஷாட நவராத்திரி.
(ஆனி மாத அமாவாசை முதல் ஒன்பது நாட்கள்)
புரட்டாசி மாதத்தில் கொண்டாடப்படுவது சாரதா நவராத்திரி.
(புரட்டாசி மாத அமாவாசை முதல் ஒன்பது நாட்கள்)
தை மாதத்தில் கொண்டாடப்படுவது சியாமளா நவராத்திரி.
(தை மாத அமாவாசை முதல் ஒன்பது நாட்கள்)

### ஆஷாட நவராத்திரி:

விவசாயம் செழிக்க வளம் பெருக அம்பிகையை வழிபடக்கூடிய காலம் ஆனி - ஆடி மாதம். இந்த மாதங்களில் ஆறுகளில் புதிய தண்ணீர் பெருக்கெடுக்கும். இந்த காலத்தில் அம்பிகையை, விவசாயம் பெருகி உலகம் சுபிக்ஷமாக விளங்க மனமுருக பிரார்த்தனை செய்வதாகவே ஆஷாட நவராத்திரி அமைந்திருக்கின்றது. பொதுவாக ஆஷாட நவராத்திரி தானிய அபிவிருத்திக்காக செய்யப்படுவது.

ஆஷாட நவராத்திரி காலத்தில் வாராஹி அம்மனை வணங்கினால் வளங்கள் பெருகும் என்ற நம்பிக்கை உள்ளது. ஆனி மாத அமாவாசை அடுத்த பிரதமை முதல் நவமி வரையிலான காலம் ஆகும்.

வடமாநிலங்களில் சில இடங்களில் ஆஷாட நவராத்திரி பிரபலமாகக் கொண்டாடப்படுகின்றது. தமிழகத்தில், தஞ்சாவூர் பெரிய கோயிலில் தனி சந்நிதியில் எழுந்தருளியுள்ள வாராஹி அம்மனுக்கு ஆஷாட நவராத்திரி சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இதில் அம்மனுக்கு தினமும் அபிஷேகமும், அலங்காரமும் நடைபெறும்.

### வாராஹி அம்மன்:

சப்த கன்னியர்களுள் மிகவும் மாறுபட்ட தோற்றத்தையும், அதிக சக்தியையும் கொண்டவர் வாராஹி.

வராஹ வடிவம் தாங்கி பூமியை மீட்ட திருமாலின் அம்சமாகத் தோன்றியவரே வாராஹி அம்மன் மிருக பலமும், தெய்வ குணமும் ஒன்றாகச் சேர்ந்து அமையப் பெற்றவர். அம்பிகையின் அம்சமாக பிறந்ததால், இவர் சிவன், ஹரி, சக்தி என்ற மூன்று அம்சங்களைக் கொண்டவர்.

எதையும் அடக்க வல்லவர். பின்னிரு கைகளில் கலப்பை, உலக்கை ஏந்தியிருப்பாள். முன்னிரு கைகளும் அபய வரத ஹஸ்தம் கொண்டு அருள்பாலிப்பவர். கறுப்பு நிறமானவர். இவர் எருமையை வாகனமாகக் கொண்டிருப்பவர்.

எதிரிகளை வெல்லவும், தடைகளை அகற்றவும் உதவி செய்பவர். வராகியை வணங்குபவர்களுக்கு துன்பமே வாராது என்பது மக்களின் நம்பிக்கை.

முற்காலத்தில் மன்னர்கள், போருக்குச் செல்லுமுன் பகைவர்களை அழிக்கவும் வெற்றி பெறவும் வாராஹி தேவியை வழிபட்டுச் செல்வதை வழக்கமாக வைத்திருந்தனர்.



## தஞ்சை பெரிய கோயிலில் வாராஹி அம்மன்:

தஞ்சை பெரிய கோயிலில் வாராஹி அம்மன் தனி சந்நிதி கொண்டு வீற்றிருக்கிறார். இங்கு வாராஹி அம்மன் வழிபாடு சிறப்பு வாய்ந்தது. பெரிய கோயிலை கட்டிய ராஜராஜசோழன் இந்த வாராஹி அம்மன் அருள் பெற்றுத்தான் எந்த செயலையும் தொடங்குவார். போருக்கு செல்லும் முன்பு வாராஹி அம்மனை வணங்குவதை வழக்கமாக வைத்திருந்தார்.

## வாராஹி அம்மன் வழிபாடு:

வாராஹி அம்மனை வணங்குவோர் வாழ்வில் சிக்கல்கள், தடைகள், தீராத பகைகள் தீரும். வாராஹி அம்மனைத் தொடர்ந்து வழிபட்டு வருவோர் பில்லி, சூனிய பிரச்சனைகள் மற்றும் எதிரிகள் தொல்லையில் இருந்து விடுபடுவார்கள்.

விவசாயம் சம்பந்தமான தொழில்களில் லாபம் பெருக அருள்புரிபவர். வீடு, நிலம் சம்பந்தமான விஷயங்களில் நற்பலனை அருள்வார்.

நீண்ட நாட்களாக முடியாத வழக்குகளிலிருந்து விடுபட வாராஹி அம்மன் அருள் கட்டாயம் தேவை. "வாராஹி உபாசனை செய்பவருடன் வாதாடாதே" என வழக்கு மொழியே உள்ளது.

ஞாயிறன்று வாராஹி அம்மனை வழிபட்டால் தீராத நோய்கள் தீரும்.

திங்கட் கிழமைகளில் வழிபட்டால் மனநல பாதிப்புகள் நீங்கும்.

செவ்வாய்க் கிழமைகளில் வழிபட்டால் வீடு, நிலம் தொடர்பான பிரச்சனைகள் தீரும்.

புதன்கிழமை வழிபட்டால் கடன் தொல்லைகள் அகலும். வியாழக்கிழமை வழிபட்டால் குழந்தைப்பேறு கிடைக்கும். கல்வி செல்வம் பெருகும்.

வெள்ளிக் கிழமை வழிபட நினைத்த காரியம் நிறைவேறும். பஞ்சமி திதி அன்று வாராஹி அம்மனை மனதார நினைத்து வழிபடுவது நல்ல பலனைத்தரும்.

பஞ்சமி தினத்தன்று தேங்காயை இரண்டாக உடைத்து, நெய் விளக்கேற்ற, கேட்ட வரங்களை தருவாள்

**வாராஹி அம்மனுக்கு நைவேத்தியம்:**

வாராஹி அம்மனுக்கு நைவத்தியமாக பூமிக்கு அடியில் விளையும் சர்க்கரை வள்ளிக்கிழங்கு, உருளைக்கிழங்கு போன்றவற்றோடு பூண்டும், வெங்காயமும் சேர்ந்த நைவேத்தியம் இடம்பெற வேண்டும் என பூஜை முறையில் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாராஹி அம்மனுக்கு பூண்டு கலந்து தோல் நீக்கப்படாத உளுந்து வடை, நவதானிய அடை, மிளகு சேர்த்த வடை, வெண்ணெய் நீக்காத தயிர்சாதம், நவதானிய அடை, தோசை இவை அனைத்தும் மிகவும் பிடிக்கும்.

**வாராஹி காயத்ரி மந்திரம்:**

"ஓம் ச்யாமளா யை வித்மேஹ
ஹல ஹஸ்தாயை தீமஹி
தன்னோ வாராஹி ப்ரசோதயாத்"

என்ற வராஹி அம்மன் காயத்திரியை சொல்லி வணங்குவோம். வளங்களையும் வெற்றிகளையும் பெறுவோம்.

ஆஷாட நவராத்திரியில் வராஹி அம்மனை வழிபாடு செய்து, ஆனந்தமான நல்வாழ்வு வாழ பிரார்த்திப்போம்.

ஓம் சக்தி.. பராசக்தி'

~ சு.சேகர்
திருவாரூர்

# பெருமாள் பெருமை!

மும்மூர்த்திகளில் ஒருவரும் காக்கும் கடவுளுமான திருமால் பற்றிய விஷயங்கள் எண்ணிக்கை அற்றவை. அவற்றுள் ஒரு சில இவைகள்.

**வைணவ புராணங்கள்**

வைணவ புராணங்கள் நான்காக, அவை கொண்ட கிரந்தங்களின் எண்ணிக்கையோ 55000! இவற்றுள் விஷ்ணு புராணம் 6000 கிரந்தங்களையும், பாகவத புராணம் 18,000 கிரந்தங்களையும், நாரதீய புராணம் 25,000 கிரந்தங்களையும், கருணபுராணம் 6000 கிரந்தங்களையும் உள்ளடைக்கியுள்ளன.

**திவ்ய தேசங்கள்**

108 வைணவத் தலங்கள் தான் திவ்ய தேசங்கள் என போற்றப்படும். 106 திவ்ய தேசங்கள் பூலோகத்தில் "பெருமாள் கோயில்" கொண்டுள்ளன. மீதி இரண்டு திவ்ய தேசங்கள் நிலவுலகில் காணமுடியாதவை. அவை திருப்பாற்கடலும், திரு பரமபதம் என்ற இரண்டு ஆகும்.

## திருமாலும், மூன்றும்

நின்ற திருக்கோலம், இருந்த திருக்கோலம், கிடந்த திருக்கோலம் என்ற மூன்று திருக்கோலங்கள் கொண்ட மகாவிஷ்ணுக்கு உரிய திரு மந்திரங்களாக "ஓம் நமோ நாராயணாய என்ற திரு வெட்டெழுத்தும், ஸ்ரீ மந் நாராயண சரணௌ சரணம் பிரபத்யே ஸ்ரீ மதே நாராயணாய நம எனும் துவயமும், சரமஸ்லோகமும் உள்ளன.



இப்பெருமைகள் கொண்ட திருமாலை மூன்று வகைகளில் சரணடைய வேண்டும்.

**ஸ்வரூப சமர்ப்பணம்** - தான் இருப்பதே அவன் அருளால் என நினைத்து தன்னையே பெருமாளுக்கு அர்ப்பணித்தல் ஒரு வகை.

**பல சமர்ப்பணம்** - இவ்வகை என்னவெனில் தன் முயற்சிகளையும், கரும பலன்களையும், பரந்தாமனிடமே ஒப்படைத்தல்.

## பார சமர்ப்பணம்

தெய்வானுபவங்களை அடையச் செய்யும் பொறுப்புகளையும் இறைவனிடத்தில் ஒப்படைத்தல்.

தன்னை அடைந்தாரைக் காத்தல், அவர்களுடைய பகைவர்களைப் விரட்டி, வைதீக தர்மத்தை நிலை நிறுத்துதல் என்ற மூன்று அவதார நோக்கங்களைக் கொண்டுள்ளார் மூன்றெழுத்துக்கார தெய்வமான "விஷ்ணு"

## வைணவர் கடமைகள்

பெருமாள் சம்பிரதாய முறைகளை கடை பிடிக்கும் முக்கிய கடமைகள் என்னென்ன தெரியுமா?

## அபிகமநம்

அன்றைய தினத்திற்குரிய கடமைகளை தடையின்றி நிறைவேற்ற எம் பெருமாளை வேண்டுதல்.

## உபாதாநம்

மனத் தூய்மையுடன் பூஜைக்குரிய சாதனங்களை சேர்த்தல்.

**இஜ்யை:** சாஸ்திர முறைப்படிப் பகவானுக்குத் திருவாராதனம் உபசாரங்களைச் செய்தல்.

**சுவாத்தியாயம்:**

திரு மந்திரம், துவயம், சரம அலோலகம் ஆகிய ரகசியங்களை அனுசந்திலர் எனப்படும் கடைபிடித்தல் ஆகும்.

**யோகம்**

சதா சர்வகாலமும் பரமாத்மாவின் திருவடிகளைத் தியானித்தல்.

**எம் பெருமானின் சொரூப குணங்கள்**

எப்பொழுதும் மாறுபடாத இயல்பு கொண்ட "சத்தியத்துவ நிலை எப்பொழுதும் குறைவு படாத ஞானமுடைய் ஞானத்துவம்" நிலை, பொருள், இடம், காலம் கடந்த நிலையான அநந்தத்துவம் நிலை, ஆனந்த வடிவாய் உள்ள ஆனந்த வடிவாய நிலை, குற்றமில்லாத் தன்மை கொண்ட அமலத்துவ நிலை என்ற ஐந்து வகை நிலைகள் படைத்தவன், இந்த பாற்கடல் உறைவோன்!

**இறைக் குணங்கள்**

நம் பிரான் என்று போற்றப்படும் காக்கும் கடவுளான இவர் வாத்சல்யம், சுவாமித்துவம், சௌசீல்யம், சௌலப்யம், ஞானம், சக்தி என்ற பெருங்குணம் படைத்தவராக அருள்கிறார்.

**பெருமாளின் அவதாரங்கள்**

மகாவிஷ்ணு பக்தர்களைக் காக்க எத்தனையோ அவதாரங்களை எடுத்திருந்தாலும், இந்த அவதாரங்கள் மிகப் போற்றப்படுபவைகளாக உள்ளன.

மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனன், பரசுராமன், ராமன், பலராமன், கண்ணன், கல்கி, தாத்தாத்ரேயர், தருமர், மோகினி, ஹயக்ரீவர், கபிலர், வியாசர், தன்வந்தரி, புருஷர் ஆகிய 18 அவதாரங்கள்.

இப்படி எத்தனையோ பெருமைகள் கொண்டவர் நம் பெருமாள்!

~ கீதாமணி

# அரிய ஆன்மீக தகவல்

பிரளய காலத்திலும் அழியாத தலம் என்னும் பெருமையைப் பெற்றது காசி மாநகரம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அதே போல, பிரளயத்தால் பாதிப்படையாத தலம், தமிழ் நாட்டில் ஒன்று உள்ளது! அது, திருவாஞ்சியம் என்னும் அழகிய தலம் திருவாரூர் மாவட்டத்தில் உள்ளது. இங்குள்ள மூலவரான வாஞ்சிநாத சுவாமியின் சிவலிங்கத் திருமேனி, மேற்கு பார்த்தவாறு அமைந்திருந்ததாம். பிரளயத்தின் போது திசை மாறி கிழக்கு முகமாக திரும்பி விட்டதாக தல புராணம் கூறுகிறது. எனவே தான், இங்கு மூலவருக்கு ஆரத்தி காட்டும் போது இரு புறமும் காட்டப்படுகிறது.

இந்த ஆலயத்தில் உள்ளே அமைந்துள்ள தீர்த்த குளம் சிறப்பு வாய்ந்தது. இத்திருக் குளத்தில் கங்கை, தனது ஆயிரம் கலைகளில் ஒன்றை மட்டும் காசியில் விடுத்து, மீதமுள்ள 999 கலைகளுடன் ஐக்கியமானதாகவும் புராணக் கூற்று உள்ளது. இந்த காரணத்தாலேயே இத்தலம். காசிக்கு இணையான தலம் என்று கருதப்பட்டு, மிக சக்தி வாய்ந்த புண்ணியத்தலமாக விளங்குகின்றது.

இங்குள்ள மற்றொரு சிறப்பு என்னவெனில் நவக்கிரக சன்னதி இங்கு கிடையாது! மாறாக, ராகு, கேது இருவரும் இணைந்த ஒரே சிற்பம் மிக சக்தி வாய்ந்ததாய் விளங்குகிறது!

ராகு, கேது தோஷம் உள்ளவர்கள் தங்கள் தோஷ நிவர்த்திக்காக இங்கு அபிஷேகம் செய்து, பரிகார பூஜைகளை செய்தால் பாம்பு கிரகங்களினால் உண்டான தோஷங்கள் அனைத்தும் நிவர்த்தியாகிறது.

எல்லா ஆலயங்களிலும் முதன்மை பெற்று விளங்குவது விநாயகர் சன்னதி தான் ஆனால், இங்கு எமன் சன்னதி சிறப்புப் பெற்று விளங்குகிறது. இதன் கருவறையில் எமதர்மனும் சித்ரகுப்தனும் அருகருகே தரிசனம் தருகின்றார்கள். சன்னதியின் எதிரே நந்தி வீற்றிருப்பது தனிச் சிறப்பாகும்.

தன்னிடம் வருவோர் பாவத்தைப் போக்குவதால் தனக்கு ஏற்பட்ட பாவ தோஷத்தைப் போக்கிக் கொள்ள கங்கை, சிவனை வேண்டி இந்த தலத்தில் சரண் புகுந்தது போல், உயிர்களை எடுப்பதனால் தனக்கு ஏற்பட்ட பாவத்தைக் போக்கிக் கொள்ள எமன் தவமிருந்து இங்கு சன்னதி பெற்றதாய் புராணம் இயம்புகின்றது.

இந்த சன்னதியில் வந்து எமனை வேண்டிக் கொள்ளும் அனைவரும் தங்கள் வயது எத்தனையோ அத்தனை நெய் தீபங்கள் வாங்கி, தீபம் ஏற்றி வழிபட்டால் உயிர்பயம் நீக்கி, நல்ல ஆரோக்கியமான வாழ்வினை எமனே அருளுவார் என்பது, சிவபெருமான் ஆசியோடு இங்கு நடக்கும் அற்புதம் ஆகும்.

தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் இங்கு நெய் தீபம் ஏற்றி, அர்ச்சனை செய்து, மரண பயம் நீங்கி மகிழ்வுடன் செல்கின்றனர்.

சிவனுக்கு வாகனமாக இருக்க வேண்டும் என்னும் எமனின் வேண்டுதலை ஏற்று, இத்தலத்தில் எமனே சிவனை சுமக்கும் வாகனமாகவும் விளங்குகிறார்.

இங்கிருக்கும் மகிஷாசுர மர்த்தினி சன்னதி, சத்ரு சம்ஹாரத்திற்கு ஏற்றதாய் அமைந்துள்ளது. எட்டு கரங்கள் கொண்ட அன்னையின் அருட்பார்வை தீவினைகள், எதிரிகள் தொல்லை போன்றவற்றை விலக்குகிறது.

இத்தனை சிறப்புகள் கொண்ட திருவாஞ்சியம் தலத்திற்கு சென்று வணங்கி, சகல இன்பங்களும் பெற்று வாழ்வில் உயரலாம்.

~ ரா. பன்னீர்செல்வம்

# தேய் பிறை அஷ்டமி வழங்கும் நற்பலன்கள் !

எல்லாத் தமிழ் மாதங்களிலும் அஷ்டமி, நவமி திதிகள் இடம் பெறும். குறிப்பாக தேய் பிறை அஷ்டமி அருளும் பல நற்பலன்களை மாத வாரியாக தெரிந்து கொள்வோம்.
இதில் சிறப்பு என்னவெனில் ஒவ்வொரு மாத தேய் பிறை அஷ்டமிக்கும் ஒரு சிறப்பு பெயர் உண்டு.

## சித்திரை மாதம்

இதில் வரும் தேய் பிறை அஷ்டமியின் பெயர் சதாசிவ அஷ்டமி என்பது. தம்பதியர்களின் மனம் ஒன்று படச் செய்யும் இந்த திதி, மனக் குழப்பம் அகலவும் உதவும்.

## வைகாசி மாதம்

பகவத அஷ்டமி என்று வழங்கப்படும் இந்த தேய்பிறை அஷ்டமி கடன் சுமையை தீர்த்து வைக்கும்.



## ஆனி மாதம்

கல்வியில் உயர்வடையச் செய்யும் இம் மாத அஷ்டமியின் பெயர் "ஐயா அஷ்டமி"

## ஆடி மாதம்

பண்டிகைகள், திரு விழாக்கள் நடைபெறும் இந்த திங்களில் வரும் "நீலகண்ட அஷ்டமி" லட்சுமி கடாட்சத்தை பெருக்க வல்லது.

## ஆவணி மாதம்

ஸ்தானு அஷ்டமி என்று அழைக்கப் படும் இந்த தேய் பிறை அஷ்டமி மனிதரைப் பிடித்துள்ள "நவ-க்கிரக தோஷத்தை போக்க வல்லது.

## புரட்டாசி மாதம்

இம்மாதத்தில் வருகிற சம்புக தேய் பிறை அஷ்டமியினால் கிடைப்பது ஆயுள் விருத்தி பலன். தவிர பித்ரு தோஷமிருந்தால் அழிந்து விடும்.

## ஐப்பசி மாதம்

ஈஸ்வர அஷ்டமி என்ற தேய்பிறை திதி தரும் நன்மை உடன் பிறந்தோரின் பகைகளைப் போக்கி, சுமுக நிலையை உருவாக்கும்.

## கார்த்திகை மாதம்

இந்த தேய் பிறை "ருத்ரா அஷ்டமி" தன வரவை அளித்து செல்வ நிலையை மேம்படுத்தி விடும்.

## மார்கழி மாதம்

சங்கர தேய் பிறை அஷ்டமி வரும் இம்மாத திதி, செய்யும் தொழிலை விரிவாக்கம் செய்யும்.

## தை மாதம்

இம்மாத தேய் பிறை அஷ்டமி கொண்ட பெயர் தேவதா அஷ்டமியாகும். உயர் பதவி தரக் கூடிய இத்திதி மனதில் கொண்ட வீண் பயத்தையும் விலக்கி விடும்.

## மாசி மாதம்

போட்டிகளில் வெற்றி பெறும் வாய்ப்பை வழங்கும் இம்மாத மகேஷ்வர தேய் பிறை அஷ்டமி.

## பங்குனி மாதம்

திரியம்பக அஷ்டமி என்ற இத் தேய்பிறை திதி திருமணத் தடை இருப்பின் அதனை அகற்றிவிடும்.

எல்லா தேய் பிறை அஷ்டமிகள் தரும் நற்பலன்களை அடைய, குறிப்பிட்ட அத்திதி நாளில் காலைப் பொழுதில் தவறாமல் குளித்து பின்பு பரமேசுவரனை வணங்கிவிட்டு, அதே நாள் மாலை சூரிய அஸ்தமன வேளையில் கால பைரவர் தரிசனத்தைப் பெற வேண்டும் என புராணங்கள் கூறும்!

~ கீதாமணி




SWASASUGAM SYRUP

For Clearing Respiratory Tract

Call: 88702 88701

# தண்ணீரில் எரிந்த விளக்கு !

முன்னொரு காலத்தில் சைவசமயத்தை அடியோடு வேரறுக்க, சமண மதத்தினை சார்ந்தவர்கள் தீவிரமாக பணியாற்றிய சம்பவங்கள் ஆங்காங்கே மிக அதிகமாக நடந்து கொண்டிருந்தது!
சிவத் தொண்டர்களை சமண சமயத்தவராய் மாற்றவும் அப்படி மாறுவதற்கு சம்மதிக்காதவர்களை எந்த வகையிலாவது தொல்லைகளைக் கொடுக்கவும் சமணர்கள் கங்கணம் கட்டி வெகுண்டெழுந்த அந்த காலகட்டத்தில் சிவபெருமான், தன்னையே வேண்டி நின்ற அடியார்களை எவ்வாறு காத்தருளினார் என்பதை உணர்த்த, இந்த நாயன்மாரின் வாழ்க்கையே சிறந்த உதாரணமாகும்!
அந்த நாயனார், நமிநந்தியடிகள் என்பவர்! திருவாரூரில் இருந்து திருத்துறைப்பூண்டிக்கு செல்லும் சாலையில் அமைந்துள்ளது ஏமப் போரூர் என்னும் அழகிய திருத்தலம்! அந்த ஏமப் போரூரில் அவதரித்தவர் தான் நமிநந்தி அடிகள்!



நமிநந்தி அடிகள் ஒரு சிறந்த சிவபக்தர் ஆவார்! "அவனருளாலே அவன் தாள் வணங்கி,..." என்கிற கூற்றுக்கேற்ப, ஈசனை வணங்குவதற்கு அவனருளைப் பெற்ற நமிநந்திக்கு, இறைவனுடைய ஆலயத்தில் ஏற்ற சேவைகள் செய்வதற்கு பொருள் வளம் ஏதும் இல்லை வறுமை என்னும் இருள் அவரை சூழ்ந்திருந்தது! என்ன தான் இருள் சூழ்ந்த வாழ்க்கையாயினும் உள்ளத்தில் ஓங்காரமாய் அருள் வெளிச்சம் பாய்ச்சுகின்ற பரமனின் அருளானது பரவிக் கிடந்தால், இறைவனுக்கு இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டும் என்னும் பேராவல் எப்போதுமே தலை தூக்கி நின்றது!
சதாசர்வகாலமும் அந்த சர்வேஸ்வரனின் புகழ்பாட, ஐந்தெழுத்து மந்திரத்தினை அவரது நா மட்டுமல்ல மனமும் அசைப்போட்டுக் கொண்டே இருந்தது! இவரது அதீத பக்தியைக் கண்ட ஊரார் அனைவரும் வியப்பெய்தினர்! சிலரோ ஏளனம் செய்து எள்ளி நகையாடினர்!
ஆனால், நமிநந்தி அடிகளோ, புறத்தே தாக்கும் எந்த சொல்லையும் பெரியதாய் நினையாமல் அகத்தே நிறைந்திருக்கும் ஆத்ம நாதனையே முப்போதும் சிந்தித்திருந்தார்!

இவரது பண்பட்ட பக்திக்கும் பரமன்மேல் கொண்ட அன்பிற்கும் எல்லையே இல்லை என்பதே உண்மை! ஆனால், இதையறியாத சில சமணர்கள் இவரை கேலி செய்ததால், இவரது மனம் சற்றும் புண்படவில்லை. மாறாக, இவரது பக்தியை மெச்சுகின்ற பரமனுக்கு அவர்களின் செய்கை கோபமூட்டியது! அதன் விளைவு?.... தனது பக்தனான நமிநந்தியை ஏளனம் செய்வோர் முன், அந்த பக்தனின் இறைத்தொண்டு

எப்படிப்பட்டது என்பதை உணர்த்த வேண்டும் என்கிற எண்ணம் உண்டானது

இறைவன் ஈசன், தன் அடியவர்கள் மீது மாறாத பற்று கொண்டவன் என்பதனை உலகறியும்! அந்த பக்தனுக்கு ஒரு இன்னல் என்றால், சும்மா பார்த்துக்கொண்டிருப்பானா அந்த பரமேஸ்வரன்!?

நமிநந்தியின் தூய பக்தியை உலகுக்கு உணர்த்த ஒரு திருவிளையாடலை நடத்தியே தீர வேண்டும் என்பது இறைவனின் ஆசை அதனை நடத்த வேண்டிய நாளும் வந்தது! ஆம்!...

ஒரு நாள்.....அந்த ஊரில் உள்ள அறநெறியப்பர் ஆலயத்திற்கு சென்றார், நமது நமிநந்தி அடிகள்! மாலை மயங்கிய நேரம் மெல்ல மெல்ல இருள் சூழத் தொடங்கியது தன்னை மறந்த நிலையில் அவ்வாலய ஆண்டவனை பார்த்தவாறே, அவரது புகழினை மனதால் கூறி போற்றிக் கொண்டிருந்தார்! "என்ன இது?...மெல்ல மெல்ல இறைவனின் தோற்றம் மறைந்து இருள் சூழ்கிறதே! இறைவனை புறக்கண்களால் காண முடியவில்லையே!... என் அகத்தில் இருக்கும் ஈசனை நான் வணங்கிடுவேன்! ஆலயத்தில் உள்ள இறைவனை பக்தர்கள் எப்படி வணங்குவார்கள்? இறைவன் உறைகின்ற கருவறையில் ஒளிசிந்தும் விளக்கு ஒன்றை ஏற்றுவார் இல்லையா?....இறைவா!" என பதறிய நமிநந்தி, அங்குமிங்கும் ஓடி நெய் அல்லது எண்ணெய் உள்ளதா என தேடினார்! எங்கும் எதுவும் கிடைக்கவில்லை!



ஆலயத்திற்கு வந்த பலரிடம் கேட்டார்! எவரிடமும் விளக்கு ஏற்றுவதற்கு நெய்யோ எண்ணெயோ கிடைக்கவே இல்லை!

அருகில் இருந்த வீட்டைப் பார்த்ததும் அவருக்குள் ஒரு புதுத்தெம்பு பிறந்தது! நிச்சயம் அங்கே நெய் கிடைக்கும்! வாங்கி வந்து இப்போதே கருவறையில் விளக்கேற்றி வைப்பேன்! பக்தர்கள் அனைவரும் இறைவனை கண்ணாரக் கண்டு, வணங்கட்டும்! என எண்ணியவர் ஓட்டமும் நடையுமாய் அந்த வீட்டை நோக்கி போனார்!

வீட்டின் வெளித் தோற்றமே இது வசதியான வீடு என்று தோன்றியது! நிச்சயம் இங்கே நெய் கிடைக்கும்; அல்லது எண்ணெயாவது கிடைக்கும் என்னும் நம்பிக்கையோடு குரல் கொடுத்தார் நமிநந்தி!

"அம்மா, அம்மா...கொஞ்சம் வாருங்கள்"....

"யாரது?"...உள்ளிருந்து ஒரு ஆணின் குரல்!

"அய்யா...ஒரு நொடி இப்படி வாருங்கள்!" மிகவும் கெஞ்சலாக அழைத்தார், நமிநந்தி!

உள்ளிருந்து வந்தவர், நமிநந்தியின் கோலத்தைப் பார்த்தார். இடையில் ஒரு சிற்றாடை! வெற்றுடம்பு! உடம்பின் பல இடங்களில் சிவச் சின்னமான திரு நீற்றுப்பட்டை, கழுத்திலே ருத்ராட்ச மாலை!

நமிநந்தியின் இந்த கோலத்தைப் பார்த்ததும் உள்ளிருந்து வேகமாக வந்த நபர், சற்றே வேகத்தைக் குறைத்து, வெறுப்பை உமிழும் பார்வையால் நமிநந்தியைத் துளைத்தெடுப்பது போல் பொங்கி வந்த சினத்தை மறைத்தவாறே ஏளனப் புன்னகையோடு எதிரே வந்து நின்றார்!

நமிநந்தியை ஏற இறங்கப் பார்த்தவர், "யார்நீர்?... என்ன வேண்டும் உமக்கு? எதற்கு இத்தனை பரபரப்பு?...."என கேள்விகளை அடுக்கினார்.

அவரது கேள்விகளுக்கிடையே ஏளனம் இழையோடி இருந்தது தெரிந்தது ஆனால், இதனை அறியாத நம் நமிநந்தி, "அய்யா! அருகிலே உள்ள அறநெறியப்பர் ஆலயத்தில் அஞ்ஞான இருளகற்றும் மெய்ஞ்ஞானச் சுடரான எம்பெருமான் இருளிலே உள்ளதை என்னால் சகிக்க முடியவில்லை. தாங்கள் மனமுவந்து சிறிதேனும் நெய் வழங்கினால், அதை விளக்கில் ஊற்றி, தீபம் ஏற்றி, கருணை பொங்கும் ஈசனின் தரிசனம் அனைவரும் பெறுவதற்கு ஆவன செய்வேன் ஐயன்மீர், நெய் தந்து அருள வேண்டும்!" என வேண்டினார், நமிநந்தி!

"கருணை பொங்கும் ஈசனின் தரிசனத்தை எல்லோரும் பெற வேண்டும்; அவ்வளவு தானே!?"..

"ஆம் அய்யா!"....

"அதற்கு என்னிடம் நெய் கேட்கின்றீர்.... அப்படித்தானே?"

"ஆம், அய்யா!"

"நான் நெய் கொடுத்தால் விளக்கேற்றுவீர்; அந்த விளக்கொளியிலே ஈசன் தரிசனம் கொடுப்பார்; சரியா?.."

"ஆம்... ஆமாம் அய்யா...அந்த அருளொளியை விளக்கொளியில் காண நெய் தந்து உதவுக"...... கெஞ்சலாகக் கேட்டார்!

"நீர் இத்தனை தூரம் என்னிடம் கெஞ்சவேண்டிய அவசியம் இல்லையே!" வீட்டுக்காரர் ஏதோ சொல்ல வர,

இடைமறித்த நமிநந்தி....."அப்படியென்றால்?".....

"அப்படியென்றால், நான் ஒரு சாதாரண மனிதன்!

கோவிலில் இருப்பவரோ கருணைக் கடல் என்கிறீர்..."

"ஆமாம் அய்யா! என் இறைவன் ஈசன் கருணைக் கடலே தான்! உளமார வேண்டி நிற்போர் கேட்டதைக் கொடுக்கும் கற்பக விருட்சம் எனது ஈசன்!"

"உண்மை தான் அந்த கற்பக விருட்சத்திடம் போய்," ஏ....கற்பக விருட்சமே! நான் விளக்கேற்றி வைக்க சிறிதளவு நெய் வேண்டும்; தாருங்கள்! என கேளுங்கள்!

இப்போது தான் அவரது நையாண்டி நமிநந்திக்கு உறைத்தது! சமண சமயத்தவரான அந்த வீட்டுக்காரர் நமிநந்தியை மேலும் வெறுப்பேற்றும் வகையில்,

"அய்யா....நீர் போய் கற்பக விருட்சத்திடம் நெய் கேளுங்கள்; அவர் தரவில்லையென்றால்....கருணைக் கடல் என்று சொன்னீரே.... அந்த கடலிடம் சிறிது தண்ணீராவது கேளுங்கள் முடிந்தால் அதில் விளக்கேற்றி வையுங்கள்; தண்ணீரில் விளக்கு எரியுமா?.." என கேலியுடன் பலமாக சிரித்தார்!

நமிநந்தி, இரு காதுகளையும் பொத்திக்கொண்டு "இறைவா", என கூறியபடி தள்ளாட்ட நடையோடு கோவிலை நோக்கி அடியெடுத்து வைத்தார்!

அவரது மனம், "பொன்னார் மேனியனே! உன் திருமேனியை பக்தர்கள் காண விளக்கேற்ற நினைத்த என் விருப்பம் நிறைவேறாதா?.. என பலவாறு புலம்பினார்!

"நமிநந்தி! என யாரோ அழைத்தது போல் இருக்கவே... நின்று திரும்பி சுற்றும் முற்றும் பார்த்தார்! மேலே இருந்து மீண்டும் அசரீரி கேட்டது! நமிநந்தி! அழைத்தது நான் தான்! இனி நெய் கேட்டு எங்கும் அலைய

வேண்டாம்! அருகிலே உள்ள ஆலய குளத்தில் இருந்து தண்ணீரை எடுத்து விளக்கில் ஊற்றி, தீபம் ஏற்று!.. விளக்கு எரியும்! கலங்காதே, போ!” என்ற அசரீரியை கேட்டு, கண்கள் உகுத்த நீரை கையால் துடைத்து, வேகமாக குளத்தை நோக்கி ஓடினார்... சிறு குடுவையில் தண்ணீரை எடுத்தார்.
அந்த நீரை விளக்கில் ஊற்றி, திரியைப் பற்றவைக்க...பட்டென உயர்ந்தது சுடரொளி! இறைவன் பளீரெனத் தெரிந்தார்! மனம் நெகிழ, கண்கள் பணிக்க கைகூப்பி வணங்கினார், நமிநந்தி!

ஆலயத்தில் கூடியிருந்த பக்தர்கள் அனைவரும் ஆச்சர்யத்தில் ஆரவாரம் செய்தனர்! ஓம் நமசிவாய என்ற கோஷம் ஆலயத்தைத் தாண்டி ஆகாயம் வரை எதிரொலித்தது!
பல பக்தர்கள் “நீரால் விளக்கேற்றிய நிர்மலன் நமிநந்தி” என உணர்ச்சிப் பெருக்கோடு நமிநந்தியடிகளின் கால்களில் விழுந்து வணங்கினர்!
சிவாலயத்தில் தண்ணீரால் விளக்கேற்றிய நமிநந்தியைப் பற்றிய செய்தி அரசனுக்கும் எட்டியது!
அறநெறியப்பர் ஆலயத்தில் பூஜைகள் தடைபடாது நடக்க, நிறைய பொருட்களை அளித்தான் அரசன்!
அதோடு திருவாரூர் தியாகராஜர் ஆலயத்தில் இறைவனுக்கு திருத்தொண்டு செய்கின்ற தலைமைப் பொறுப்பையும் நமிநந்திக்கு அளித்தான் அரசன்!
நமிநந்தியின் பக்தியை உலகுக்குணர்த்தவும் சமணர்களுக்கு சைவ நெறியின் மகத்துவத்தை உணர்த்தவும் இறைவன் ஒரு நாடகம் நடத்தி,
தண்ணீரில் விளக்கெரியத் செய்து, நமிநந்தியடிகளை நாயன்மார் என்னும் அந்தஸ்தில் உயர்த்தி, வணங்க செய்தார்!
உத்தம பக்தர் நமிநந்தியடிகள் அறுபத்து மூவரில் ஒருவராய் அணி செய்கிறார்.

~ ரா. பன்னீர்செல்வம்




# ஆசைகள் அனைத்தையும் நிறைவேற மாரியம்மன் எந்திர வழிபாடு

மாரியம்மன் எந்திரமானது மிகவும் சக்தி வாய்ந்ததாக கருதப்படுகிறது. மனை, வீடு, வாகனம் மற்றும் சொத்துக்கள் மீதுள்ள ஆசைகள் அனைத்தையும் நிறைவேற்றிக் கொள்ள மாரியம்மன் எந்திர வழிபாடு வழிவகை செய்கிறது. இது மட்டும் அல்லாமல் ஆன்மீகத் தேடுதலில் உள்ளவர்களுக்கு நல்ல முன்னேற்றத்தையும், நமது எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளும் முயற்சிகளில் உள்ள தடைகளையும் போக்கும் வல்லமை இந்த மாரியம்மன் எந்திரத்திற்கு உண்டு. இந்த எந்திரத்தின் முக்கிய அம்சம் எதுவென்றால் நம்மை சுற்றி இருக்கும் எதிர்மறை சக்திகளான செய்வினை, ஏவல் போன்றவற்றில் இருந்து நம்மை காத்து எதிரிகளை வெல்ல இந்த மாரியம்மன் எந்திர வழிபாடு பேருதவிபுரிகிறது. இத்தகைய நன்மைகளை நமக்கு அளிக்கும் மாரியம்மன் எந்திரத்தை பூஜை அறையில் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி வைத்து, தினமும் கனகாம்பரம் பூவை கொண்டு பூஜித்து தீப தூப ஆராதனை காட்டி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மந்திரத்தை 108 முறை கூறிவருவதால் நம்முடைய ஆசைகள் அனைத்தையும் நிறைவேற்றிக் கொள்ள முடியும். இது மட்டும் அல்லாமல் எதிரி மற்றும் துஸ்ட்ட சக்திகளிடமிருந்து நம்மை தற்காத்துக் கொள்ள முடியும்.

**மாரியம்மன் காயத்ரி மந்திரம்:**


ஓம் பிசாசத்வஜாய வித்மஹே
கட்க ஹஸ்தாய தீமஹி
தன்னோ மாரி ப்ரசோதயாத்




~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# ஆடல்வல்லானுக்கு ஆனித் திருமஞ்சனத் திருவிழா !

(சென்ற இதழின் தொடர்ச்சி)



மாணிக்கவாசகர்

உலகம் பெற்ற பாக்கியதால்,
"தேன் புக்க தன்பனை சூழ்நிலைச்
சிற்றம் பலவன்
தான் புக்கு நட்டம் பயிலும் அது ஏன், ஏடி
தான் புக்கு நட்டம் பயின்றிலன்
ஏற்றரணி எல்லாம்
வான் புக்க வேற் காளிக் கூட்டாங்
காண் சாழலோ!"
என்று மாணிக்கவாசகர் பெருமான் பாடியருளிய அற்புத சிவத்தாண்டவம், சிதம்பரத்தில் விரைவில் அரங்கேறியது.

ஒருநாள், தில்லையில் எழுந்தருளியுள்ள ஈசன் திரு மூலட்டானேசுவரருக்கும், அதே தலத்தில் உள்ள அம்பிகையாகிய காளி தேவிக்கும் நடனப் போட்டி நடந்தது, தங்களில் நடனம் புரிவதில் எவர் முதன்மையானவர் என்பதை உலகிற்கு உணர்த்த.

நடனப் போட்டித் தொடங்கியது. இச்செய்தியை அறிந்த பிரம்மா, சரஸ்வதி, லட்சுமி, மகாவிஷ்ணு உள்ளிட்ட அனைத்து வானுலகத் தேவர்களும் அன்று கூடி விட்டனர், இந்த அரிய நிகழ்ச்சியைக் கண்டு களிக்க!

போட்டி நடனம் மும்முரமாக நடந்து கொண்டிருக்கையில், வேண்டுமென்றே தன் காதணியை பூமியை நோக்கி விழ செய்தார் ஈசுவரன். பின்பு அதனை சாமர்த்தியமாக நடன பாணியிலேயே தன் ஒரு காலை ஆகாயம் நோக்கி உயர்த்தி விட்டு, மற்றொரு கால் விரல்கள் மூலம் காதணியை பூமியிலிருந்து பற்றி மீண்டும் தன் காதில் போட்டார் அந்த அணியை. ஆனால் காளியோ பெண்மைக் குணம் படைத்தவள் என்பதால் சிவனைப் போன்று காலை வான் நோக்கி உயர்த்திச் செய்ய இயலாத நிலையில் தன் தோல்வியை ஒத்துக் கொண்டாள். அந்த நடனம் கொண்ட பெயர் ஊர்த்துவத் தாண்டவம் என்பது.

இந்தப் போட்டி நிகழ்ச்சி பரமேசுவரனால் முன் கூட்டியே நிர்ணயித்து விட்டதால் தான் அதனை அன்றைய தினத்தில் வியாக்கிரபாதர் முனிவரும், பதஞ்சலி முனிவரும் தில்லையம்பதி வந்து இந்த அரிய சிவதாண்டவ வைபவத்தைக் கண்டு தரிசித்து அளப்பரும் ஆனந்தம் பெற முடிந்தது்

இதற்குப் பிறகு சிவபிரானின் கட்டளைக்கு இணங்கி காளி தேவி தில்லையின் வடபுறம் அமர்ந்து எல்லைக் காளியாக இருக்கை கொண்டாள்.

சிவபிரான் களி நடனம் புரிந்த திருத் தலங்களில் பொன்மன்றமான தில்லை ஆலயத்தில் சிற்சபை, கனகசபை, தேவசபை, நிருத்த சபை, இராஜ சபை என்ற ஐந்து திருச்சபைகள் அமைய இறைவன் திரு மூலட்டானேசுவரராக இங்கே குடி கொண்டார் என்கிறது தல புராண நூல்.

கயிலையம் பதியில் ஈசுவரன் சிவகணங்கள் புடை சூழ காட்சி அருளுவது போலவே, சிதம்பரமே

கயிலாயமாகி, தில்லை வாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேரும் சிவகணங்காளாகி விட்டனர். எனவே தில்லை பூலோக கைலாசமானது. இப்படி சிதம்பரத் தலம் குறித்து இன்னும் அநேக புராண நிகழ்வுகள் உண்டு..

இனி தில்லையில் இறை தரிசனம் பெறலாம்.

திருச் சிற்றம்பலம் என்னும் சிற்சபையில் தான் நடராஜப் பெருமான் நடனத் திருக்கோலத்தில் அருள் பாலிக்கிறார். இங்கே ஈசன் இதனையே கருவறையாகக் கொண்டு பிரம்மனின் தலைகளை மாலையாக அணிந்து காட்சி தருவார். இறைவனின் இடப்புறம் அன்னை சிவகாம சுந்தரி எழுந்தருளியுள்ளார்.

சிவன் உறைந்த இந்த திருச் சிற்றம்பலம் தங்க

ஓடுகள் வேய்ந்த விமானத்தோடு திகழ, பொன்னம்பலப் பகுதியோ 9 கலசங்கள், 64 கைமரங்கள் அமைத்து ஒளிர்கிறது!

சிற்சபையில் உள்ள சிவபிரானின் வலப்பக்கம் சின்ன வாசல் இருக்க, அதன் வெளியே ஒரு திரை தொங்கவிடப்பட்டிருக்கும். அத்திரைக்குப் பின்னால் ஆகாய வடிவில் ஆன, ஆகாயலிங்கமாய் மந்திர சொரூபமாக திருவம்பலத்துடன் அமைக்கப்பட்டுள்ளது காட்சியாகும். இதுவே சிதம்பர ரகசியம் எனப்படும். மூர்த்தியோ, லிங்கமோ இல்லாது அரை வட்ட திருவாசியாகத் தான் இருக்கும். அதற்கு ஆண்டுக்கு ஒரு தடவை புனுகு சட்டம் சாத்தப்படும். தவிர இரண்டே இரண்டு அபிஷேகங்கள் மட்டுமே உண்டு.

தத்துவ சுருக்க விளக்கமென்னவெனில் "ஆன்மசிவ ஐக்கிய நிலை தான் இந்த சிதம்பர ரகசியம்" எனும் ஆன்மீக கணக்கீடு!

சிற்சபையாகிய பொன்னம்பல கதாநாயகன், சகளம் என்கிற உருவம், நிஷ்களம் என்கிற அரூபம், சகள நிஷ்களமாகிய அருவுருவம் எனும் மூன்று வெவ்வேறு வகை தத்துவார்த்த தோற்றங் கொண்டு எழுந்தருளியுள்ளார்.

சிவத் திருமேனியே சகளம்; சிதம்பர ரகசியமே நிஷ்களம் அங்குள்ள ஸ்படிகலிங்கம் தான் சகல நிஷ்களம் எனப்படுகிறது!

சிற்சபைக்கு எதிரே அதனை ஒட்டி அமைந்துள்ள எதிரம்பலம் கனக சபை என அழைக்கப்படும். இங்கே அ/மி..சந்திரமௌலீசுவரர் ஸ்படிகலிங்க வடிவில் இருந்து தினமும் ஆறுகால பூஜை பெறுகிறார். பக்தர்கள் களிப்புடன் இப்பூஜையைக் காண்கிறார்கள்.

சிதம்பர ஆலய பேரம்பலம் எனும் தேவசபை, கோயிலின் நடுக் கூடத்தின் வெளியே அமைந்துள்ளது. இங்கு காட்சி தருவார்கள் உற்சவ, பஞ்சமூர்த்திகள்.

அடுத்துக் கூறப்படும் தேர் அம்பலமாகிய நிருத்த சபை; இது கொடிமரத்தின் தெற்கே உள்ளது, 56 அழகிய சிற்ப வேலைப்பாடு கொண்ட தூண்கள் உள்ள பகுதியும் கூட இது!

நிருத்த சபையின் கருவறையில் எழுந்தருளியிருப்பார் கண்கள் பிரசித்திப் பெற்ற ஊர்த்துவத் தாண்டவ மூர்த்தியும், நடனம் புரியும் நிலையில் அன்னை காளி தேவியும்.

இத்தல சிவன் குடிகொண்ட சிவாலயத்தில் உள்ள ஆயிரங்கால் மண்டபமே, ராஜசபை எனும் தேவராகிய மண்டபமாகும், பல புராண, சாத்திர சம்பவங்கள் இங்கே அரங்கேறியுள்ளன. எத்தனையோ

வகை சிற்பக் கலை நுணுக்கங்கள் இங்கு அமைக்கப்பட்டு காண்போரை வியக்கவைக்கும், அவை அடுத்து பக்தர்களை ஈர்த்து மகிழ வைப்பது, ஆலயத்தில் உள்ள பொன்னம் பலத்து அருகே இருக்கும் மேடையில் அமைந்த அ/மி கோவிந்த ராஜர் திருக்கோயில். இதனை சித்திரக்கூடம் என்று வழங்குவார்கள். சைவ, வைணவ ஒற்றுமைக்கு அன்று இதுவும் ஒன்று.

புண்டரீக மகாத்மிய நூலில் சிவபிரானின் திரு நடனத்தைக் கண்டு ஆனந்திக்கவே மகாவிஷ்ணு இங்கே விஜயம் செய்து குடி கொண்டார் எனக் கூறப்பட்டுள்ளது, புராணங்களில்.

தில்லையின் கதாநாயகன் நடராஜர் என்பதால் அவரைப் பற்றிய பல விஷயங்களை மட்டுமே இதுவரை சொல்லப்பட்டது.

மாபெரும் தில்லையார் ஆலயத்தில் எழுந்தருளி, பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் பல தெய்வங்கள், மகான்களின் சுருக்க விபரம் இவை ___

தெற்கு கோபுர வாயிலின் வெளி பக்கம் உள்ள விநாயகர், சுப்பிரமணியரில் தொடங்கி தரிசனம் அமையும்.

கோட்ட விநாயகர், கோட்ட தட்சிணாமூர்த்தி, நந்தி தேவர், சுப்பிரமணியர் திருக்கோயில், முக்குருணி விநாயகர், கற்பக விநாயகர், முத்துக்குமார சுவாமி, மீனாட்சி சுந்தரேசுவரர், ஒற்றைக் கால் மண்டப விநாயகர், சிவகாமி அம்மன் தனிக்கோயில், அகிலாண்டேசுவரி, துர்க்கையம்மன், பாண்டிய நாயக்கர், சண்முகர், தனிக்கோயிலில் சிவகாம சுந்தரி அம்மன், சித்திரகுப்தர், நடுக்கம் தீர்த்த விநாயகர், வள்ளி, தேவசேனா சகித சுப்பிரமணியர், ஆதி சங்கரர், சப்தமாதர்கள், சண்டிகேசுவரி, நவலிங்கங்கள், புருஷா மிருகங்கள், சிவ ஊர்த்துவத் தாண்டவ மூர்த்தி, காலசம்ஹார மூர்த்தி, சரபேசுவரர் , தண்டாயுத பாணி, தாயுமானவர், திருமுறை காட்டிய விநாயகர், சைவ சந்தான ஆசிரியர்கள், தேவார நால்வர், துண்டி விநாயகர், 63 மூவர், அருணாசலேசுவரர், சேக்கிழார், நம்பியாண்டார் நம்பி, வியாக்கிரபாதர், பதஞ்சலி, சாஸ்தா, தட்சிணாமூர்த்தி, பார்வதி தேவி, மல்லிகேசுவரர், சண்டீகேசுவரர், ஆறுமுகர் பிச்சாடனர், காலபைரவர், நவகிரங்கங்கள் என இங்கே குடி கொள்ளாத தெய்வங்களே இல்லை எனப்படுகிறது.

ஆண்டு முழுமையுமே தில்லையார் ஆலயத்தில், ஒவ்வொரு மாதமும் பல விழாக்கள் நடத்தப்படுகின்றன. குறிப்பாக ஆனி மாதத்தில் நடைபெறும் பெருந்திருவிழாவாக அமைகிறது.

## ஆனித் திருமஞ்சனத் திருவிழா

முதல் நாள் கொடி ஏற்றத்துடன் தொடங்கும் இவ்விழா தொடர்ந்து 10 நாட்கள் வெகு விமர்சையாக நடத்தப்படும். அன்றாடம் தினமும் அபிஷேகம் பெறுவர் ஆலய மூர்த்திகள்.

இரண்டாம் நாள் தொடங்கி விழா முடியும் 10ம் நாள் வரை, பலவாகன வீதி புறப்பாடு, யாக சாலை பஞ்சமூர்த்திகள் மூன்றாம் நாள் தேர்த்திருவிழா, பத்தாம் இறுதி தினம் எம்பெருமான் நடராஜர், அன்னை சிவகாமியுடன் சச்சிதானந்த நடன தரிசனம், பின்பு கொடி இறக்க விழா இப்படி பல நிகழ்வுகள் வெகு அமர்க்களமாக நடத்தப்படும் இவ்வாலயத்தில்.

தில்லை நடராஜரின் ஆனித் திருமஞ்சனத் திருவிழா என மகுட மிடப்பட்ட திரு விழா, ஆலய விழா ஆரம்பித்த பத்தாம் நாளன்று இப்படி விமர்சையாக நடக்கிறது.

பத்தாம் தினத்தில் திரு வீதி உலா நடந்து முடிந்த பிறகு இறைவன் நடராஜரும், சிவகாமி அன்னையும் ராஜசபை எனும் ஆயிரங்கால் மண்டபத்தில் எழுந்தருளச் செய்வார்கள். பிறகு அங்கிருந்து இறைத் திரு

உருவங்கள் நடன பந்தி என்ற மண்டபம் வழியே உலா வருகையில் சச்சிதானந்த  நடனம் புரிந்தவாறே ஞான ஆகாசம் என வர்ணிக்கப்படும் சிற்சபைக்கு நடராஜர் தேவியுடன் வந்தடைவார். அது தான் ஆனித் திருமஞ்சன விழாவின் இன்னொரு முக்கியக் கட்டமாகும்.

அன்று இரவு நடராஜருக்கு நடைபெறும் பெரிய அபிஷேகத்தை "கடா பிஷேகம்" என வழங்குவார்கள். அதன் பிறகு ஆலயக்கொடி இறக்கப்படுகிறது.

அது போன்று, நிகழும் ப்லவ ஆண்டில் ஆனி மாத பஞ்சமி திதியில் ஆனி உத்திர அபிஷேகம், 30ம் தேதியும் ஆங்கில ஜூலை 14ம் தின நள்ளிரவு தில்லை அம்பலனுக்கும், தேவிக்கும் சிறப்பாக நடத்தப்படவுள்ளது அடுத்த தினம் ஆனி 31ம் நாளன்று, மீண்டும் அந்த இறைத் திரு உருக்களுக்கு விசேட அபிஷேகம் நடத்தப்பட்டு விழாவின் உச்சக்கட்ட ஆனி உத்திர தரிசனம் பக்தர்களுக்கு கிடைக்கும்...

நாள் தோறும் ஆதிரையான் ஆன நடராஜருக்கு ஆறுகால பூஜைகள் பெருமளவில் நடத்தப்படுகிறது. பக்தர்கள் அம்பலவாணரின் தரிசனம் பெறும் ஆலய நேரம் காலை 6 மணி முதல் மதியம் 12 மணி வரையும், பிற்பகல் 5 மணி முதல் இரவு 10 மணி வரையும் ஆகும்.

சிதம்பர திருத்தலம் சென்னை மாநகரத்திற்கு தென் திசையில், புகை வண்டி மார்க்கத்தில் 270 வது கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது.

புகை வண்டி நிலையத்திலிருந்து தில்லை அம்பலத்தானின் பெரிய சிவாலயம், நகரின் மையப் பகுதியில், சுமார் 1 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இங்கே நிறைய வாடகைக் கார், ஆட்டோ, நகர பேருந்து வசதிகள் உள்ளன.

தில்லைக் கூத்தன், தன் சிற்சபையை விட்டு புறப்படுதல், படைத்தலையும், நீராடல் காத்தலையும், முடிவாக இடம் பெறும் தீபாராதனை அழித்தலையும், வெள்ளைச் சாத்துப்பொடி  வழிபாடு மறைத்தலையும், வீதி வலம் வரல், மடையடி தரிசனமளித்தல் அருளளையும் காட்டும் விதம் என ஆன்மீகப் பெரியவர்கள் கணித்துக் கூறியுள்ளார்கள்.

இத்தனை சிறப்புக்கள் படைத்த சிதம்பரம் நடராஜரின் தரிசனத்தைப் பெற்று, அநேக புண்ணியங்களை ஈட்டுவோம்.

ஓம் நமசிவாய!

~ கீதாமணி


Special Birthday Ritual Packages for You

Get 40% OFF

Call: **88702 88701**

# தர்ம மனம்

"அவன் செய்தது தர்மமா? நீங்களே சொல்லுங்கள்."
"நீதி, நேர்மை, தர்மம்" இதெல்லாம் எங்கு போயிற்று?
"நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நிச்சயம் தர்ம ஆட்சி கொண்டு வருவோம்"
"போட்டாங்க பாரு அந்த கூட்டத்திலே அவனுக்கு தர்ம அடி"
"அம்மா தர்ம பத்தினி நீ செஞ்சது சரியா?"
இது போன்ற பல உரையாடல்கள் வெவ்வேறு சூழ்நிலைகளில் பலர் நாம் பேசக் கேட்டிருக்கலாம்.
"அது என்ன தர்மம்?" தெரிந்து கொள்ள ஆவல் பற்றுகிறதா? மனு ஸ்மிருதி (6, 92 ) -ல் தர்மம் குறித்து இப்படிச் சொல்லப்பட்டுள்ளது.

திருதி எனும் உறுதி
கடிமை எனும் மன்னித்தல்
தமம் எனும் புலனடக்கம்
மனோ வாக்கு காயங்களின்
தூய்மை
பொறிகளை அடக்குதல்
நல்லறிவு
கல்வி
சத்தியம்
வெகுளாமை



தர்ம மனம் படைத்தோர் இவற்றைக் கொண்டிருந்தால் அவர்கள் தர்மவான்களே!
"வேதத்தால் பிளக்கப்பட்டதும், இம்மையிலும், மறுமையிலும், மேன்மை எய்துதலையே குறிக்கோளாகக் கொண்ட ஒவ்வொரு மனிதனும் விரும்புவதும், எதுவோ அதுவே "தர்மம்" என விளம்புகிறது வேறொரு கோணத்தில் - மீமாம்ச தரிசன நூல் (1 -1 -2 )
வைசோஷித தரிசன நூலோ (1 -1 -2 ) "இவ்வுலகில் மேம்பாடும், பிறகு மோட்சமும் எதனால் எய்தப்படுமோ அதன் பெயரே தர்மம்" எனச் சுட்டிக் காட்டுகிறது.

தர்மம் குறித்து வால்மீகி முனிவர் சொல்லாதிருப்பாரா - ஆவலோடு ராமாயணத்தைப் புரட்டினால், ஆரண்யா காண்டத்தில் வால்மீகி தர்மம் பற்றி தனது கருத்தை இப்படிக் கூறியிருப்பதைக் காணமுடிகிறது.
"உலகில் உள்ள அனைத்திலும் தர்மமே பெரிது. தர்மத்தின் மீதே சத்தியம் குடிகொண்டிருக்கிறது. (அயோத்திய காண்டம் - 21 , 41 )
தர்மத்திலிருந்து பொருள் கிடைக்கிறது. அதிலிருந்து சுகம் கிடைக்கிறது. தர்மத்திலிருந்தே எல்லாம் பெறப்படுகின்றன. இவ்வுலகின் சாரமே தர்மம் தான்! (ஆரண்யா காண்டம்- 9 -30 -31 )
"யுக தர்மம்" எப்படியுள்ளது?
நவக்கிரங்களில் தலை சிறந்த சூரியன், இதர எட்டுக் கிரகங்களையும் ஈர்க்கக்கூடியதாக அமைந்து,

அவை சூரியனையே சுற்றி வருகின்றன. சூரியனை பூமி கூடச் சுற்றுகிறது. பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்ள ஒரு நாளும், சூரியனைச் சுற்ற 365 நாட்களும் (ஒரு ஆண்டு முழுமையும்) ஆகின்றன. சனி சூரியனைச் சுற்றிவர முப்பது ஆண்டுகள் ஆகிவிடும்.

மக்களின் மூச்சுகளில் பிங்கலையாகத் திகழ்பவன் சூரியன் இடகலையாக ஒளிரிடுபவன் சந்திரன்.

இப்படிப்பட்ட யுகதர்மத்தை சிருஷ்டி செய்தது இறைவன் கொண்ட "தர்ம மனம்" தான்!

இவை நான்கு புருஷார்த்தங்கள் என அறநூல்களில் கூறப்பட்டுள்ளன.

"தர்ம -அர்த்த -காம -மோட்சம்" என. இவற்றைக் கடைபிடிப்போர் நிரந்தர உழைப்பாளிகள் என வேதப் புருஷர்கள் போற்றியுள்ளனர்.

இதிலே முதலில் இடம்பெறும் "தர்மம்" எப்போதுமே நம்மை விட்டு நீங்கக் கூடாது.

பணம் (அர்த்தம்) சம்பாதிப்பதும், காம அனுபவம் ஏற்படுத்திக் கொள்வதும் நம்மை நீங்கி ஒரு காலத்தில் விலகிவிடும். ஏனெனில் இவை சிற்றின்பங்கள். ஆனால், இவற்றை அனுபவிக்கும் காலத்தில் கூட, "தர்மம்" நம்முடனேயே இருக்கும் வகையில் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மொத்தத்தில் "தர்மம்" ஒருவனை அவன் துறவி ஆனால்கூட விடுவதில்லை. அது சன்யாச தர்மம் ஆகிவிடுகிறது.

உயர்ந்த நிலையை அடைகிற மனிதனின் நிழலாய் தொடரும் தர்மம், அவனை விடாமல் ஒட்டிக் கொண்டு அவன் ஆற்றும் காரியங்களில் வெளிப்படுத்திக் கொள்ளும் தன்மை கொண்டது.

"அர்த்த காமங்களை தர்மப்படி ஆண்டு அனுபவிப்பதே இல்லறம். அதற்கு ஆரம்பமாக இருப்பது விவாகம்" என்று காஞ்சிப் பெரியவர்கள் "தெய்வத்தின் குரலில்" அருளுவார்.

இல்லற தர்மத்தைக் காப்பவன் வாழ்வில் என்றும் வசந்தமே.

முக்கியமான இரண்டு "தர்ம காவலர்கள்" என ஆன்மீக உலகு சுட்டுவது - தர்மன் - மகாபாரதத்தில் ராமன் - ராமாயணத்தில்.

முன்னொரு அத்தியாயத்தில் (காதல் மனம்) கோசலை ராமனும், மிதிலைச் சீதையும் கண்ணோடு கண் நோக்கி மகிழ்ந்ததைப் பார்த்துள்ளோம்.

சீதையை மனதால் எண்ணியபடியே தனக்கு தங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாளிகைக்குத் திரும்பும், அவனுடைய "தர்ம மனம்" என்ன எண்ணியது என்பது சுவையான ஒன்று.

"ஆமாம்! அந்த சீதையைக் கண்டு நான் காதல் வயப்பட்டேனே - இது முறையா? ஒருக்கால் அவள் வேறொருவரின் மனைவியாக இருந்துவிட்டால் அது பெரும்பிழையாயிற்றே! "பரதார கமனத்தை" க்கண்டிக்க வேண்டிய நானே அந்தப் பாவம் புரியலாமா?

"அல் வழி" யில் செல்லாத என் மனம் அவளை விரும்பிய காரணத்தால் நிச்சயம் அவள் கன்னியாகத் தான் இருப்பாள்.

இந்த "மன தர்மம்" ராமனை "கண்ணிய ராமனாக" ஒளிவிடச் செய்கிறது.

"பெண்ணரசி பாஞ்சாலி
பெருஞ் சபதம் பாடியநம்
பேசரிய பாரதியைப் பேசி
பரவ துமே" என்று

அறிஞர் பரலி.சு.நெல்லையப்பர் சிறப்பித்துப் பாடிய தேசியக் கவிஞன் மகாகவி பாரதியார், தான் இயற்கையாகக் கொண்ட தர்ம மனதால், இப்படிப் புலம்புகிறார் ___

எந்தக் கட்டத்தில்?

பாஞ்சாலியை சூதில் வென்று கௌரவர் தலைவன் துரியோதனன் இட்ட கட்டளைப்படி, தம்பி துச்சாதனன் தனது மற்றொரு சகோதரனின் மனைவியை அலங்கோலமாய் சபைக்கு இழுத்து வருகிறான் ("பாஞ்சாலி சபதம்" நூல்)

"ஐயகோ என்றே அலறி
உணர்வற்றுப்
பாண்டவர் தேவியவள் பாதியுயிர் கொண்டுவர,
நீண்ட கருங்குழலை நீசம் கரன் பற்றி
முன்னிழுத்துச் சென்றான்;
வழிநெடுக மொய்த்தவராய்
என்னக் கொடுமை இது என்று பார்த்திருந்தார்
ஊரவர்தம் கீழ்மை உரைக்கும் தரமாமோ?
வீரம் இலா நாய்கள்!
விலங்காம் இளவரசன்"

என...

தனது வருவாயைக் காட்டிலும் குறைந்தே செலவு செய்யவேண்டும் என்று "சரக சம்ஹிதை" எனும் நூல் கூறும் தர்ம அறிவுரை, வீட்டு லோன், எலெக்ஷன் செலவு, திருமண ஆடம்பரம், கிரெடிட் கார்டு என்று அலையும் இக்கால மானிடர்கள் காதில் விழுமா என்ன?

தர்மம் என்பது கல்வெட்டைப் போன்றது; அதர்மம் அந்த வானவிலுக்கே இணை.

மனம், குணம் என்ற தம்பதிகள் பெற்ற தலைசிறந்த குழந்தையே தர்மமாக, அத்தகைய மனம் கொண்ட ஒருவனைப் பார்க்கலாம்.

அந்த ஒருவனை வில்லிபுத்தூரார் இப்படி வர்ணிப்பார்:

"வெங்கண் மாமணி முரசு உயிர்த்தருளிய மெய் தவாமொழி வேந்தன்" என, அவனே தர்மன். பாண்டவர்களில் மூத்தவன்.

ஒரு சந்தர்ப்பத்தில் வனத்தில் இருக்கும் சூழ்நிலையில் பாண்டவர்களுக்கு ஒரு சோதனை ஏற்பட்டது. காட்டின் மதியப் பொழுதில் தீராத தாக உணர்வு, தர்ம உணர்வு கொண்ட தர்மனுக்கு ஏற்பட்டது. குடிநீரைத் தேடி கொண்டுவர தர்மன் தன் தம்பி சகாதேவனை அனுப்பினான். தரைப் பகுதியில் எங்கும் குளம் காணாத நிலையில் சகாதேவன் அருகில் இருந்த குன்றின் மீது ஏறிப்பார்க்க, அங்கு குளிர்ச்சி தரும் சுனை ஒன்றைக் கண்டு, ஆவலோடு அந்நீரைச் சுவைக்கத் தொடங்கினான். நீரைப் பருகிய அடுத்தகணம் அங்கேயே சுருண்டு இறந்தான் அவன்.

சகாதேவன் வரத் தாமதமாக, அடுத்து தர்மம் ஒருவனை நீருக்காக அனுப்ப, அவன் கண்ணிலும், அந்த நச்சுசுனை தென்பட, அதில் இருந்த தண்ணீரால் அவனும் மரணமடைந்தான். அடுத்து அனுப்பப்பட்ட அர்ஜுனனுக்கும் இதே கதி தான் ஏற்பட்டது. தர்மன் குறிப்பறிந்த பீமன் "தான் விரைவாகத் தண்ணீர் கொண்டு வருகிறேன்" என தமயனிடம் பெற்றுச் சென்றான்.

நீருக்காக எங்கெங்கோ அலைந்த பீமனின் கண்ணிலும் அந்த விஷச்சுனை தென்பட்டது. அவன் அங்கே இறங்க முயற்சிக்கையில் அங்கு இறந்து கிடந்த மூன்று உடன்பிறப்புகளையும் கண்டுவிட்டு அழுதான். இவர்கள் மரணமுற இந்தச் சுனை நீர்தான் காரணமாக இருக்கும் என யூகித்த பீமன், அந்தச் சுனையின் கரையில் உள்ள மணற்பகுதியில் "இந்தச் சுனைநீர் நஞ்சு கொண்டது" என எழுதி வைத்துவிட்டு, அவனும் சுனையில் ஜலத்தை அருந்தி, மாண்டு போனான்.

நேரம் போய்க்கொண்டே இருக்க, தாகம் முற்றித் தவித்த தர்மன், நீரைத் தேடியும், சகோதரர்களைத் தேடியும் அலைய ஆரம்பித்தான். விதித் தேவன் தர்மனையும் அச்சுனையருகே கொண்டு சேர்த்துவிட்டான்.

அச்சுனையருகே பேச்சுமூச்சு அற்றுக் கிடக்கும் தம்பிகளைக் கண்ட அந்த அண்ணனின் பாச மனம் துடிதுடித்தது. "என்னால் அன்றோ இவர்களின் இன்னுயிர் பறிக்கப்பட்டது?" இப்படி அவனுடைய தர்ம மனம் சங்கடப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்குக் காரணம் துரியோதனின் சூழ்ச்சி தான் என உடன் யூகித்த தர்மன், தன் இளவல்கள் இல்லாது, தான் மட்டும் வாழ மனதில்லாது பீமன், "இது விஷ நீர்" என எழுதியதைப் பார்த்திருந்தும், தானும் அதைக் குடித்து மரித்துவிடுவோம் என்ற முடிவுடன் சுனையருகே சென்றான். அப்போது வானில் ஒரு அசரீரியின் குரல் பிரமாண்டமாக ஒலித்தது.

"தர்மா! நீ நீர் அருந்தும் முன்பாக எனது சில கேள்விகளுக்கு விடையளி"

உடனே தர்மன் கேள்விகளை விரைந்து கேட்கலாம் எனக்கூற, முதல் கேள்வி பிறந்தது.

"உலகில் உள்ள நூல்களிலும் சிறந்தது எது?"

"இதர நூல்களில் கிடைப்பதற்கு அரிய மெய்ப்பொருள் கொண்ட வேதமே அது!"

"இல்லறத்துக்குரிய ஒன்று?"

"நற்குணங்கள் பொருந்திய மனைவி"

"வனப்பான மாலைகளுள் தலை சிறந்த மாலை எது?"

"நல்ல சாதிப்பூவால் கட்டப்பட்ட மாலை"

"அரிய பெரும் தவமெது?"

"தம் குலத்துக்கு ஏற்ப ஒழுகும் ஒழுக்கம் தான்"

"முனிவர்கள் துதிக்கும் இறைவன் யார் தெரியுமா?"

"மனமுள்ள துளசி மாலை சூடும் திருமால்"

"மகளிர் கொள்ளவேண்டிய குணம் எது?"

"நாணக் குணம்"

"மனிதர்கள் செவிக்கு இனிமையானது எது அறிவாயா?"

"மழலை பேசும் தம் குழந்தைகளின் இனிய சொற்கள்தான்"

"நிலைத்து நிற்பது?"

"புகழ்"

"கற்க வேண்டியது?"

"கல்வி"

"இறுதியான இந்த முக்கிய கேள்விக்கு உறுதியாகப் பதில் சொல்:

செல்வம் மிக்கோர்க்கு காவலாக இருப்பது"

ஈகையைத் தனது உடலாகக் கொண்ட அந்த பாண்டவன் உடனே பதிலளித்தான் இப்படி: ஹ "அது தர்மம், தர்மம், தர்மம் ஒன்றேதான்!"

கேள்வி கேட்டவன் எமதர்மராஜாவாக, தக்க பதிலை தர்மன் அளித்ததைக் கேட்டு மனமகிழ்ச்சியுற்று, இறந்து போன நான்கு பாண்டவர்களையும் உயிர்ப்பித்து தந்தான் யமன்!

எனவே தர்ம மனம் கொண்டோர் யமனுக்குக் கூட அஞ்சவேண்டாமல்லவா?

"குருவே!"

"என்ன சிஷ்யா?" ஆதரவுடன் குரு கேட்க, அந்த சிஷ்யன்,

" எனக்கு ஒரு ஐயம்?"

"எதைப் பற்றி!"

"எல்லோரும் தர்மப்படி நடக்க வேண்டும். அது நமது யுகதர்மம் என்றெல்லாம் சொல்கிறார்களே... அந்த தர்ம மனம் இல்லாவிட்டால் என்ன குறைந்து போகும்?"

"சரி...அதற்கான விடையைப் பின்பு சொல்வேன்; அதற்கு முன்பாக, இந்த எனது இரண்டு வேட்டிகளையும் ஆற்றில் துவைத்துவிட்டு என்னிடம் வா" என அந்த குரு உத்தரவிட்டார்.

குரு சொன்னபடி நன்கு துவைத்த அந்த இரண்டு ஈர வேட்டிகளுடன் அவரைச் சந்தித்தான் சீடன்.

"இந்த இரண்டில் ஒரு வேட்டியை நல்ல வெயில் உள்ள இடத்தில் உலர்த்திவிடு மற்றொன்றை அங்கே காற்றோட்டமில்லாத ஒரு இருட்டுப் பகுதி உள்ளதே அங்கு அதைக் காயப்போடு" என குரு சொன்னபடி சீடன் அப்படியே செய்தான்.

பக்குவமில்லாத மனமுடைய சீடன் நினைத்தான் - "குருவுக்கே சரியான விடை தெரியவில்லை போலும்"

அன்று மாலையே அச் சீடனிடம் "நான் காலையில் தோய்த்து, உலர்த்தச் சொன்ன வேட்டிகளைக் கொண்டுவா" என குரு கூறினார். கொண்டு வந்தான் சீடன்

"ஏனப்பா! இந்த இரண்டு வேட்டிகளில் உனக்கு ஏதேனும் வித்தியாசம் புலப்படுகிறதா?"

"குருவே! இதோ இந்த துணி வெயிலின்றி நிழலில் உலர்த்தியதால் இன்னும் சரியாகக் காயவில்லை. தவிர, அந்த வேட்டியிலிருந்து துர்நாற்றம் கூட வருகிறது"

"என் அன்பு சிஷ்யா! கேட்டுக்கொள் முதலில் காய வைத்த வேட்டி தான் தர்ம மனம் கொண்ட மனிதன். அடுத்து இருட்டில் உலர்த்தி வைக்கப்பட்ட வேட்டிதான் தர்ம மனமில்லா மனிதன். வித்தியாசம் புரிந்ததா" எனப் புன்முறுவலுடன் விளக்கம் சொல்ல, சீடன் உண்மையைத் தெளிவாகப் புரிந்து கொண்டான்.

உலக மக்கள் தர்மப்படி, நியாயப்படி நடக்க வேண்டும் என்ற மனம் கொண்ட சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகள் அந்நூலில் இப்படி வற்புறுத்துவார்:

"அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாவதும் உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும் ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதும்" (பதிகம்: 55 - 7 )

தன் அரசவையில், பாண்டிய மன்னரின் முன்பு "தனது கணவன் கோவலன் குற்றமற்றவன்" என்று தக்கபடி கற்புக்கரசி கண்ணகி நிரூபித்துவிடவே, தர்மப்படி, நியாயப்படி அதுவரை செங்கோலாட்சி புரிந்து வந்த பாண்டிய மன்னன் நிலைகுலைந்து போகிறான்.

"ஐயோ தர்மம் தவறிவிட்டோமே" - இப்படி அஞ்சிய அந்த தர்மவான்....

"--------மணிகண்டு

தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்

பொன்செய் கொல்லன் தன் சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதைக் காக்கும் தென்புலங்காவல்
என் முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுளென
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே.."
(பதிகம் 20 ;72 , 78 )
ஆம்! தொடர்ந்து அரசனின் மூச்சும் நின்றுபோனது.
அடுத்த காட்சியாக, தர்மம் தவறிய தன் கணவன் தன் எதிரிலேயே உயிர் துறக்க, அதைக் கண்டு அதிர்ச்சியுற்ற அரசனின் பட்டமகிஷி மாதேவி பெருந்தேவி,
"கணவனை யிழந்தோர்க்கு காட்டுவ தில்"
என்ற அற உணர்ச்சி கொண்டு அந்த அரசனின் இரண்டு பாதங்களையும் பற்றிக்கொண்டே உயிர் விடுகிறாள்.
இத்தகைய தர்ம மனங்கொண்டோராலேயே தான் இவ்வுலகம் இன்னும் வாழ்ந்து கொண்டு இருக்கிறது.
"தர்மம்", "அதர்மம்" இந்த இரண்டையும் விட்டு மனிதன் தனித்து நிற்க முடியுமா? இந்தக் கேள்விக்கு விடையளிக்கிறது இப்படி ஈசாவாஸ்ய உபநிடதம்.
"உணர்வுள்ள ஞானி எதிலும் தன் ஆத்மாவைக் காண்கிறான் எல்லாவற்றையும் ஆத்மாவில் காண்கிறான் எல்லாப் பொருளையும் சமமாகப் பாவிக்கும் அவன் எந்தவித வேற்றுமைகளையும் காண்பதில்லை. இத்தகையோனே தர்மத்தினின்றும், அதர்மத்தினின்றும் விடுபட்டு நிற்கிறான். அவன் தானே விளங்கும் சுயம்பிரகாசனாகி விடுவான்."
அறம் என்பது என்ன?
இன்னது செய்யவேண்டும் என்று வரையறுக்கப்பட்ட நெறியே அறம் அல்லது தர்மம்.
கடல் போன்றது அறம் அதற்கு இல்லை எல்லை
"அந்தணர் என்போர்
அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுகலான்"
என்பார் திருவள்ளுவர்.
தான் பெறக்கூடிய அனைத்து இன்பங்களையும், இவ்வுலகில் வாழ்வோரும் பெறவேண்டும் என்று நினைப்பவன் தர்ம மனம் கொண்டவன்.
தர்ம உள்ளங் கொண்டவன் சிந்தனை இப்படித்தான் வேலை செய்யும்:
"எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்கவும் நின் தெய்வ அருட் கருணை செய்வாய் பராபரமே"
என்று தாயுமானவர் இறைவனைக் கோரியவாறு.
தர்ம நெறி மனம் கொண்ட அரிச்சந்திரன் வாய்மை எனும் சத்தியத்தைக் கடைபிடித்து வாழ்ந்தான்.
அவன் முதன் நிலை இப்படியாகத்தான் இருந்தது விதியின் சதியால்!
"பதியி ழந்தனம், பாலனையி ழந்தனம், படைத்த நிதியி ழந்தனம், இனிநமக் குளதென நினைக்கும் கதியி ழக்கினும் கட்டுரை இழக்கிலேன்"

பிறகு மானத்தையும் இழந்த அம்மன்னன் இறுதியில் தர்மம் தந்த வெற்றியால் இழந்த அத்தனையும்

திரும்ப அடைந்து இறவாப் புகழை தனக்கும், தர்மத்துக்கும் அல்லவா வெற்றுத்தந்தான்!

"அறநெறி தவறும் தனி மனிதன்;
அற நெறி தவறும் அரசு - மன்னன்;
அறத்துக்கு மாறாக நடப்போர்;
அனைவருமே கெடுவது உறுதி!
அறம் அவர்கட்குத் தக்க தண்டனையைத் தரும்!"

மாறாக, அறநெறியின் வாயில்களான ஒழுக்கம், நேர்மை, வாய்மை போன்ற நன்னெறிகளைக் கடைபிடித்து நடப்போர். எல்லா நன்மைகளையும் பெறுவர்; தான் வாழ்வாங்கு வாழ்வதுடன் பிறரையும் வாழ வைப்பர் என்ற உண்மை உணரத்தக்கது!

என தன்னுடைய சிறந்த நூலான, "திருக்குறள் தெளிபொருள் அகவல்" நூலில் தமிழ் மேதை, புலவர் என்.இ. ராமலிங்கம் அவர்கள் "அறத்தான்" வருவதே இன்பம்" என்ற பகுதியில் சிறப்பாகக் கூறியுள்ளதை இங்கு நினைத்துப் பாப்போம்.
தர்மம் உலகில் அழிக்க
இயலா, சிரஞ்சீவிதான்!

~ ஆரூர். ஆர். சுப்பிரமணியன்
துணை கலெக்டர் (ஓய்வு)

# நவராத்திரி பண்டிகையும், மன்னர் கிருஷ்ண தேவராயரும்!

நவராத்திரி விழா "தசரா" என்ற பெயரில் அக்காலத்திலிருந்து இக்காலம் வரை மிக சிறப்பாக கொண்டாடப்பட்டு வருவது அனைவரும் அறிந்த விஷயமே. ஆனால் தன் ஆட்சி காலத்தில் விஜயநகரப் பேரரசின் மன்னர் கிருஷ்ண தேவராயர் எவ்விதம் கொண்டாடி இருப்பார் என்பதைய அறிய அது எவ்வளவு அம்மன்னரின் விருப்பமான ஒரு பண்டிகையாக இருந்துள்ளது என்று உணர முடிகிறது!
நவராத்திரி பண்டிகையின் ஒவ்வொரு நாளும் காலையில் கிருஷ்ண தேவராயர் தன் அரண்மனையின் ஒரு பிரம்மாண்ட பகுதியான விஜய மகாலுக்கு உரிய பரி வாரங்களுடன் வருகை புரிவார். அங்கே ஐதீக முறைப்படி ஒரு முக்கிய கோணத்தில் பிரதிஷ்டையான துர்க்கா தேவிக்கு ஒரு பெரிய அறையில் அந்தணர்கள் சிலர், அரசர் அங்கு வரும் முன்பே பூஜையைத் தொடங்கி இருப்பார்கள்.
விஜயமகாலில் நுழைந்த உடனேயே மன்னர் நேராக பயபக்தியுடன் நடை புரிந்து தேவியை வழிபடுவார். பின்பு அந்த அறைக்கு வெளியே நின்று காத்திருந்த பல அரசாங்க பெரும் பதவி வசிப்பவர்களும், நடன மாதர்களும், இதர சிறு பணி செய்பவர்களும், மன்னரைக் கண்டதும் வணங்கி வாழ்த்தொலி எழுப்புவார்கள்.



அப்பக்கத்திலே ஒரு புறம் கிருஷ்ண தேவராயரின் அன்புக்குப் பாத்திரமான சிறந்த குதிரைகள் பல விதமாக அலங்கரிக்கப்பட்டு நின்று கொண்டிருக்கும். அவைகளுக்கும் பின்னால் நான்கு யானைகளும், மிகப் மாதமாக அலங்கரிக்கப்பட்டு நிற்கும்.
ஒரு அர்ச்சகர் தன் கையில் உள்ள பெரிய வெள்ளித் தட்டு நிறைய வெள்ளை ரோஜாப் பூக்களை நிரப்பிக் கொண்டு, குதிரைகளைக் காண வரும் ராய மன்னரை தொடர்ந்து வருவார்.

குதிரைகள் பக்கம் வரும் மன்னர், தட்டிலிருந்து சில பூக்களை எடுத்து மூன்று தடவைகள் குதிரைகள் மீது போடுவார். அடுத்து மன்னர் அங்குள்ள யானைகள் மீதும் மூன்று முறை பூக்களைப் போட்டு விட்டு, குதிரை, யானைகளுக்கு தன் கையாலேயே சாம்பிராணி தீப ஆரத்தி புரிவார். இதற்கப்புறம் தான் அர்ச்சகர் அங்குள்ள அந்த மிருகங்களுக்கு முறைப்படி மந்திரம் சொல்லி அர்ச்சனை புரிவார்.
அடுத்து அரசர் மெல்ல நடந்து பூஜை அறையில் நுழைந்து அங்குள்ள ஒரு ஆசனத்தில் அமர்வார். பூஜை அறைக்கு வெளியே இதற்கும் முன்பே நிற்க வைக்கப்பட்டிருக்கும் 24 எருமைக் கடாக்களும் 150 ஆடுகளும், வரிசையாக பலியிடப்படும். அக்காட்சியை மன்னரின் எதிரே உள்ள ஜன்னல் மூலம்

அவர் காண்பார்.
இந்நிகழ்வு முடிந்தவுடன் பூஜை அறையை விட்டு கிளம்பும் கிருஷ்ண தேவராயர் அங்குள்ள பெரிய தர்பார் மண்டபம் செல்வார். அங்கே உள்ள பெரிய அரியாசனத்தில் அவர் கம்பீரமாக ஏறும் போதே, அங்கு நிற்கும் பல அந்தணர்கள் வாழ்த்தொலி கூறியவாறே, அவரது சிரசிலும், உடலிலும் பல புஷ்பங்களை சொரிவார்கள்.

அது முடிவுற்றதும்  மன்னர் தனது விலையுயர்ந்த நவரத்தினங்கள் பதிக்கப் பெற்ற சிரசை அலங்கரித்துக் கொண்டிருந்த கிரீடத்தை கீழிறக்கி தரை மீது சாஷ்டாங்கமாக நமஸ்கரிப்பார்.
இந்நிகழ்ச்சி நவராத்திரி பண்டிகையின் ஒன்பது நாட்களிலும் தவறாது இடம் பெறும்.
நவராத்திரி தினத்தில் காலை நிகழ்ச்சிகளைப் பார்த்த, நாம் கிருஷ்ண தேவராயரின் மாலை நடவடிக்கைகளைக் கண்டு ரசிக்கலாம்!
நவராத்திரி மாலைப் பொழுது நிகழ்ச்சி அரண்மனையில் 3 மணிக்கே தொடங்கிவிடும். லாக்டவுன் பீரியட் போல், கூட்டமாக வரும் மக்களை ஒழுங்குப்படுத்தி ஒரே தடவையில் சிலரை மட்டுமே உள்ளே போக அனுமதிக்கப்படும் அப்பொழுது!
அதற்கும் முன்பே அரண்மனையின் பெரிய மண்டபத்தில் மல்யுத்த வீரர்களும், படை வீரர்களும், நடன மாதர்களும் உள்ளே அவரவர்களுக்கென ஒதுக்கியுள்ள பகுதியில் அமர்ந்திருப்பார்கள்.

இந்நிகழ்ச்சியின் போது, கிருஷ்ண தேவராயரை எடுத்து வளர்த்த, அவர் அப்பாஜி என மரியாதையுடன் அழைக்கும் அமைச்சர் சாலுவதிம்மரசு என்பவர், நவராத்திரியின் முக்கிய பிரமுகராய் கௌரவிக்கப்படுவார்.
மன்னர் அந்த மண்டபத்திற்கு வருகை தரும் முன்பே அப்பாஜி, அங்குள்ள  மையப் பகுதியில் உள்ள இருக்கையில் அமர்ந்து நிகழ்ச்சிக்கான கட்டளைகளை இட்டுக் கொண்டிருப்பார். அனைத்து ஏற்பாடுகளும் திருப்திகரமாக முடிந்தவுடன் அப்பாஜி மன்னருக்கு செய்தி சொல்லி அனுப்புவார்.
கிருஷ்ண தேவராயர் பெரிய மண்டபத்தில் நுழைந்தவுடன், அங்குள்ள அத்தனை பேர்களும் வாழ்த்தொலிகள் எழுப்பி நின்று மன்னருக்கு வந்தனம் செலுத்துவார்கள்.
மன்னர் அப்பொழுது அணிந்திருக்கும் வெண் பட்டாடையில் தங்கத்தால் உருவாக்கப்பட்ட பல ரோஜா மலர்கள் பதிக்கப்பட்டு ஜொலிக்கும். அரசரின் கழுத்தை வைர, நவரத்தின, முத்து இவற்றால் ஆன பல ஹாரங்கள் எனும் மாலைகள் சூழ்ந்து அலங்கரிக்கும்!

அங்கு வைக்கப்பட்டுள்ள துர்க்கா தேவிக்கு பல அலங்காரங்கள் செய்யப்பட்டு, தரிசன நிலையில் காணப்படும். அம்மனின் இருபக்கமும் வெண்சாமரம் வீசிக் கொண்டு இருப்பார்கள்.

~ கீதாமணி

# மூவர் சமாதி

தமிழ் கூறும் நல்லுலகுக்கு திருப்பாவை என்னும் அருந்தமிழ்ப் பாக்களை கொடுத்த கோதை நாச்சியார் ஆண்டாள் அவதரித்த திருத்தலம் ஸ்ரீவில்லிபுத்தூர்! இந்த ஊர்ல அமைந்திருக்கிற மூவர் சமாதிய தான் இந்த சித்தர் பூமி பகுதியில பார்க்கப்போறோம்!

என்னது? மூவர் சமாதியா? அப்படினா மூன்று ஜீவசமாதிகள் அமைஞ்சிருக்குதா? அதுவும் ஒரே இடத்துலயா? சரி... அந்த மூன்று சித்தர்கள் யார்? அவங்களோட சிறப்புகள் என்ன? அந்த ஜீவசமாதியில இன்னைக்கு வரைக்கும் நடந்து வர்ற அற்புதங்கள் என்ன? என்பதைப் பற்றியெல்லாம் இப்ப பார்க்கலாம்!

ஸ்ரீவில்லிபுத்தூர் பேருந்து நிலையத்துல இருந்து சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவுல ஏகாந்தமான பகுதியில, இயற்கை எழிலோட அமைஞ்சிருக்குது இந்த மூவர் சமாதி!




இங்க ஐக்கியமாகியிருக்கிற அந்த மூன்று மகான்கள் யார் யார்னு பார்த்தா...... சுவாமி சங்கரானந்தர், மாணிக்கம் சுவாமிகள், மதுரை முனீஸ்வரன் சுவாமிகள் ஆகிய மூன்று மகான்கள் தான் இங்கே ஜீவசமாதி அடைஞ்சிருக்கிறதா சொன்னாங்க! அதனால தான் இதுக்கு மூவர் சமாதின்னு பெயர் வந்ததாம். ஆனா, இந்தப் பகுதி மக்கள்லாம் இதை மூவர் கோயில்னு சொல்றாங்க் அந்த அளவுக்கு மக்கள் இந்த மகான்கள தெய்வமா வணங்கறதும் அவங்க குறைகள் எல்லாம் தீர்த்து நல்வாழ்வு அடையறதும் இங்க வழக்கமா நடந்து வருது!

ஊருக்கு ஒதுக்குப்புறமா, சுடுகாட்டை ஒட்டி, இந்த மூவர் சமாதி அமைஞ்சிருக்கு!

எத்தனை ஆண்டுகள் பழமை வாய்ந்ததோ? அப்படிங்கற மலைப்பைத் தருவதா இருந்தது, இங்க இருந்த மிகப் பெரிய ஆலமரம்! இதனுடைய அடிப்பகுதி அவ்வளவு பெருசா இருந்தத்து இதல இயற்கையா ஒரு குகை போன்ற அமைப்பு இருந்தத்து அதல சுவாமி சங்கரானந்தரோட போட்டோவ மாட்டி வச்சிருந்தாங்க! இந்த குகை மாதிரியான இடத்துல தான் சுவாமி சங்கரானந்தர் அமர்ந்து தவம் செய்தார்னு சொன்னாங்க!

இப்ப இந்த மரத்தபத்தின ஒரு சிறப்பு செய்தி அது என்னன்னா.... குழந்தைப் பேறு இல்லாதவங்க....நோய் நொடி, கடன் தொல்லை, பிழைப்புக்கு வழிதேடி வர்றவங்க இந்த ஆலமரத்த 12 முறை சுத்தி வந்து வேண்டிகிட்டா.... நெனைச்சது அப்படியே நடக்குதாம்!

இப்படி சுத்தி வந்து வேண்டின பல பேருக்கு குழந்தை செல்வம் கிடைச்சிருக்கறதா பெருமையோட சொன்னாங்க! இது சங்கரானந்த சித்தருடைய மகிமைன்னு நல்லாவே தெரிஞ்சது!

இங்க இருக்கற முதல் ஜீவசமாதி சுவாமி சங்கரானந்தரோட ஜீவசமாதி தனியா ஒரு ஓட்டு வீடு மாதிரி அமைப்புல இருந்தது இந்த ஜீவசமாதி! சமாதியின் மேல சிவலிங்கமும் சுவர்ல அவரோட படமும் இருந்தது!

இந்த சங்கரானந்தர், ஸ்ரீ வில்லிபுத்தூர்ல இருந்து தென்காசி போகற வழியில இருக்கற சேத்தூர சேர்ந்தவர்னு தெரிஞ்சது இங்க வந்து 12 ஆண்டுகள் மௌனமா தவம் இருந்தாராம். வர்ற பக்தர்களுக்கு சிலேட்டுல எழுதிக்காட்டி அருள் செய்து வந்தாராம்.

ஒரு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால மழையை வர வழைப்பதற்காக தன்னோட மூக்கு, காது, நாக்கையெல்லாம் அறுத்துப்போட்டு மழை பெய்ய வச்சாராம். அதனால, அப்ப....இந்த பகுதி மக்கள் இவர மூக்கறுந்த சுவாமின்னு தான் சொல்வாங்களாம். 1977 ம் ஆண்டு இவர் ஜீவசமாதி அடைஞ்சார்னு தெரிஞ்சது!

இந்த ஜீவசமாதியில வேண்டிகிட்ட ஒரு பெண்ணுக்கு கேன்சர் நோய் குணமாகி இன்னைக்கு நல்லபடியா இருக்கறதா சொன்னாங்க் இங்கு வந்து வேண்டிக்கொண்டால் எப்படிப்பட்ட நோயையும் சங்கரானந்தர் குணப்படுத்துவார் என்று இன்றும் பல பக்தர்கள் இந்த ஜீவசமாதியில் வந்து வேண்டிக்கொண்டு நலம் பெறுகின்றனர். இந்த ஜீவசமாதியில் தியானம் செய்வதன் மூலம் நினைத்ததை எல்லாம் அடைய முடியும் என்று எல்லோரும் நம்புகின்றனர்.

அடுத்ததா இருந்தது, சிறிய அளவிலான ஜீவசமாதி இது மாணிக்க சித்தரோட ஜீவசமாதி! வாசுதேவ நல்லூரை சேர்ந்த இந்த மாணிக்கம் சித்தர், மதுரையில் வாழ்ந்து, பின் இங்கு வந்திருக்கறாரு! சுமார் 40 ஆண்டுகள் குளிக்காம, பல் தேய்க்காம ஒரே உடையில இருந்திருக்காரு, இந்த சித்தர்!

இவர் சமாதி அடைஞ்ச அன்னைக்கு, இவரோட உடல எடுத்து வெளிய வச்சதும் இவருக்கு மேல மட்டும் மழை பெய்து பல காலம் குளிக்காம இருந்த இவரோட உடம்ப இயற்கையே குளிப்பாட்டி விட்டதாம். இவர வணங்கினா நோய் மட்டுமில்ல; கடன் பிரச்சனை தீரும்னு பயன் பெற்றவங்க சொல்றாங்க!

இவர் 1992 ல் ஜீவசமாதி அடைஞ்சாராம்.

அடுத்ததா அமைஞ்சிருந்தது, மதுரை முனீஸ்வர சுவாமிகள் ஜீவசமாதி இவர், வெள்ளை நிற பைஜாமா, பேண்ட்ல நாகரீகமா தெரிவாராம். இவர் நிகழ்த்திய அற்புதம் என்னன்னா... சென்னை அப்பல்லோ ஆஸ்பிடல்ல வெளிநாட்டுல இருந்து வந்த ஒரு மெஷின் இயங்காம இருந்த போது, அத தன் கையால தொட்டு ஓட வச்சாராம். இவர மனசால நினைச்சி வேண்டினா... எந்தப் பிரச்சினையா இருந்தாலும் அது முடிஞ்சு போச்சின்னு உடனே போன் மூலமா தகவல் வந்துடுமாம்.

அதி அற்புத சக்தி வாய்ந்த இந்த மூன்று மகான்களும் ஒரு சேர சமாதி அடைஞ்ச இந்த மூவர் கோவில் அப்படிங்கற மூவர் சமாதியில எந்த நேரமும் பக்தர்கள் கூட்டம் அலைமோதறத பார்க்க முடிஞ்சது! இங்க வந்து வணங்கற பக்தர்களின் நோய், கடன்சுமை தீருது! பசியில்லாத வாழ்க்கை அமையுது! குழந்தை செல்வம் கிடைக்குது இந்த மூன்று மகான்களையும் வணங்கி நல்வாழ்வு அடைவோம்!

~ ரா. பன்னீர்செல்வம்

# ஆடியைக் கொண்டாடும் பல சிவத் தலங்கள் !

ஆடி மாதத்திற்கும் சிவத்தலங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. குறிப்பாக அத்தல ஆலயங்களில் குடி கொண்ட அம்மன், அம்பாள் என்ற தேவியை நம் மக்கள் ஆடி மாதத்தில் விழா எடுத்து அன்றிலிருந்து இன்று வரை விமர்சையாக கொண்டாடி மகிழ்கிறார்கள்.

புராண மகாபாரத காலத்திலிருந்தே ஆடி மாதம் புனிதமானதாக போற்றப்பட்டு வருகிறது. கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் நடந்த மகாபாரதப் போர் ஆடி 1 ம் தேதி தொடங்கி அம்மாத 18ம் தேதி வரை கடுமையாக நடந்து அரக்க குணமிக்க கௌரவர்கள் அப்போரில் அழிந்து போக நற்குணம் படைத்த பாண்டவர்கள் வெற்றி கொடி நாட்டினார்கள். இதனைப் போற்றும் வகையில் ஆடிப் பண்டிகை தொன்று தொட்டு மக்களால் கொண்டாடப் பட்டு வருகிறது என நம்பப்படுகிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரை, புனித காவிரி ஆறு எங்கெங்கு ஓடுகிறதோ அங்கெல்லாம் "ஆடி" தலை நிமிர்ந்து நடைபோடும்.

"நீரின்றி அமையாது உலகு" என திருவள்ளுவர் உரைத்தது போல, பயிர்களை வளர வைக்கும், செழிக்க வைக்கும் காவிரி ஓடுமிடமெல்லாம், அக்கரை வாழ் மக்கள் அக்கறை கொண்டு, சிரத்தை கூடிய பக்தியுடன் காவிரியைக் கொண்டாடும் வகையிலே ஆடி மாதத்தில் விழா எடுத்து மகிழ்கிறார்கள்.

அப்படி "ஆடி" யை விழா எடுத்து ஆனந்திக்கும் பக்தர்கள் வாழும் சில சிவத் தலங்களையும், இந்த ஊர்களையும் பார்ப்போம்.

## சங்கரன் கோயில்



சங்கரன் கோயில் என்ற தலம் நெல்லை மாவட்டத்தில் உள்ளது. சிவனும், பெருமாளும் இணைந்த இவ்வூர் ஆலய நாயகராக அ/மி சங்கர நாராயணர் திகழ்கிறார்.

கி.பி. 1022 ல் கட்டப்பட்ட இவ்வூர் ஆலயத்தில் ஆடி மாதத்தில் நடக்கும் உற்சவத்தின் போது அ/மி கோமதியம்மனுக்கு சுவாமி சங்கர நாராயணராகவும், பின்பு சங்கர லிங்கராகவும் அருட்காட்சி தரும் வைபவ விழா "ஆடித் தபசு" எனக் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் ஆடி மாத உத்திராடம் நட்சத்திரத்தில் ஆடித் தபசு விழா 12 நாட்கள் மிகப் பிரமாதமாக நிகழ்த்தப்பட்டு வருகிறது. அம்பாள் மட்டுமே தேர் பவனி வரும் இவ்விழாவைக் காண ஆயிரக்கணக்கில் மக்கள் கூடுவார்கள்.

## கொல்லி மலை

சேலம், நாமக்கல், திருச்சி எனும் மூன்று மாவட்டங்களின் எல்லையில் அமைந்துள்ளது கொல்லி மலை. கம்ப ராமாயணத்தில் இத்தலம் பற்றி குறிப்பு உண்டு.

இச்சிவத்தலத்தில் எழுந்தருளி வணங்கப்படுகிறார் அ/மி அறப்பளீஸ்வரர். இங்கே ஐந்து நதிகள் ஒன்றாகக் கலந்தோடும்.



அந்த ஆற்றில் பல வண்ணங்கொண்ட மீன்கள் துள்ளி ஓடும். ஆலயச் சிவன் அறப்பளீஸ்வரர் மீன் வடிவில் உறைவதாக இங்குள்ள குடி மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளதால் ஆற்று மீன்களை பிடிக்க மாட்டார்கள்.

ஆடி 18 ம் தேதியன்று அவ்வூரார் மீன்களுக்கு நிறைய உணவை ஆற்று நீரில் போட, அவைகள் துள்ளி விளையாடி அவற்றை உண்ண வரும்.

அப்போது சிலர் மட்டும், வரும் பெரிய மீன்களை கையில் பிடித்து அவற்றுக்கு மூக்குத்தி அணிவித்து வழிபட்டு மீண்டும் ஆற்றிலேயே விட்டு விடுவார்கள்.

இந்நிகழ்வு பல ஆண்டுகளாக நடை பெற்று வருகிறது அங்கே.

## திண்டுக்கல் கோட்டை மாரியம்மன்



200 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழமை கொண்ட திண்டுக்கல் கோட்டை மாரியம்மன், ஒரு தனி பீடத்தில் குடி கொள்ளாமல் இத்திருக் கோயிலில் பூமிக்கடியில் புதைந்த நிலையில் எழுந்தருளியுள்ளாள்.

ஆடி மாத இரண்டாம் வெள்ளிக்கிழமை தொடங்கி ஐந்து நாட்கள் இங்கே பெரிய விழா நடைபெறும். பல சிறப்பு பூஜைகள் பெறும் அம்பாள் விழா பின் 3 ம் நாள், வீதி உலா புறப்பாடு செய்வாள். ஐந்தாம் நாள் விழாவின் போது மஞ்சள் காப்பு அபிஷேகம் நடத்தப்படும்.

இந்த பூஜை நாட்களில் நேர்ந்து கொண்ட பக்தர்கள், "கூழ் காய்ச்சி ஊற்றும் நிகழ்ச்சி" காணத்தகுந்த ஒன்று.

அம்மை நோய் வாய்ப்பட்டோர் இந்த மாரியம்மனை துதித்து, கூழ்க் காய்ச்ச வேண்டிக் கொண்ட பிறகு, தங்கள் நன்றியை வெளிப்படுத்தும் விதமான விழாவாக உள்ளது "கூழ்க் காய்ச்சி ஊற்றும் நிகழ்ச்சி"

## பவானி கூடுதுறை வேதநாயகியம்மன்



ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ளது பவானி கூடுதுறை. இங்கே காவிரிநதியும், பவானி நதியும் கூட, அந்தர் வாகினி எனப்படும் கண்ணுக்குப் புலப்படாத அமிர்நதியும் இணையும் புனிதத்தலமிது. இக்கூடுதுறையின் கரையில், அ/மி வேதநாயகி சமேத சங்கமேஸ்வரரும், அ/மி சௌந்தரவல்லித்தாயார், ஸ்ரீ தேவி, பூதேவி உடனுறை ஆதி கேசவப்பெருமாளும், கோயில் கொண்டு அருள் பாலிக்கிறார்கள்.

ஆடித் திங்களின் முதல் நாளிலும், 18 ம் நாளிலும், புதுமணத் தம்பதிகள் கூடு துறை காவிரியாற்றுக்கு வந்து காவிரி அன்னையை வழிப்பட்டு தாலி சரடுகளை மாற்றும் புனித நிகழ்வு பல காலமாக நடைபெற்று வருகிறது.

இவ்வாறு செய்வதால் புதுமணத் தம்பதிகளுக்கு காசிக்குப் போன புண்ணியம் கிட்டுவதோடு, அவர்கள் கொண்ட அனைத்து பாவங்களும் போய் விடும் என்பது ஐதீகம்.

மேற்கண்ட தினங்களில் ஆயிரக்கணக்கில் மக்கள் கூடு துறைக்கு வருகிறார்கள்.

### பெரியபாளையம் அன்னை பவானி



ஊத்துக்கோட்டை பெரிய பாளையம் என்ற தலத்தில் குடி கொண்ட பவானி அம்மன் "பெரிய பாளையத்தாள்" என்றே அன்புடனும், பக்தியுடனும் வழிபாடாகிறாள்.

ஆடி மாத தினங்களில் குறிப்பாக வெள்ளிக் கிழமைகளில், தாங்கள் கொண்ட துயரங்கள் அகல, வேப்ப இலைகளால் உருவான ஆடை உடுத்தி அம்மனை வலம் வந்து பூஜிக்கிறார்கள். வேண்டுதல் கொண்டோர் தீச்சட்டி, காவடி எடுக்கும் வழக்கமும் உண்டு.

தமிழகத்தின் வெவ்வேறு மாவட்டத்தில் உள்ள இன்னும் பல தலங்களில், குறிப்பாக பரமேசுவரர் குடி கொண்ட அநேக ஆலயங்களில் "ஆடி விழா" மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது குறிப்பிடத்தக்கது.

~ கீதாமணி

# ஆகஸ்ட் மாத ராசிபலன் 2021

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

## மேஷம்



- உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.
- சுயதொழில் செய்பவர்கள் தங்கள் இலக்குகளை அடைய அதிக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- திருமணத்திற்குக் காத்திருப்பவர்களுக்கு தக்க துணை கிடைக்க உகந்த மாதம் ஆகும்.
- குடும்பத்தில் அமைதி நிலவ  வாக்கு வாதத்தை தவிர்க்க வேண்டும்.
- விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் கணவன் மனைவி உறவில் நெருக்கம் அதிகரிக்கும்.
- இந்த மாதம் தங்களின் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். வருமானம் உயரும்.
- பங்கு வர்த்தகத்தில் அதிக லாபங்களை எதிர்பார்க்கலாம்.
- மாணவர்களுக்கு இந்த மாதம் சிறந்த மாதமாக இருக்கும். படிப்பில் வெற்றி கிடைக்கும்.
- உங்கள் ஆரோக்கியத்தில் சிறிது கவனம் தேவை. தினமும்  உடற்பயிற்சி செய்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை நீங்கள் பாதுகாத்துக் கொள்ள இயலும்.

## ரிஷபம்



- அரசு தொழில் புரிபவர்கள் மேல் அதிகாரிகளுடன் கருத்து வேறுபாடு ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளது. வாக்குவாத்தை தவிர்ப்பது நன்மை பயக்கும்.
- நீங்கள் ஆடை மற்றும் உணவுத் துறையில் பணிபுரிபவர் என்றால் உத்தியோகத்தில் உயர்வு உண்டு.
- வங்கித் துறை, கல்வித்துறை, ஊடகத் துறை மற்றும் பொழுதுபோக்குத் துறையில் இருக்கும் தொழில் வல்லுனர்கள் இந்த மாதம் தங்கள் தொழிலில் பிரகாசிப்பார்கள்.
- சுயதொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும். தொழிலில் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம்.
- உங்கள் கடந்த கால முதலீடுகளின் மூலம் நீங்கள் லாபம் பெறுவீர்கள். உங்கள் பணப்புழக்கம் கணிசமாக அதிகரிக்கும்.
- இந்த மாதம் புதிய முதலீடுகளை தவிர்ப்பது நல்லது..
- மாணவர்களின் கிரகிக்கும் திறன் கூடும். படிப்பில் வெற்றி கிடைக்கும்.

# மிதுனம்



- உத்தியோகத்தில் பதவி உயர்வை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பவர்க்ளுகு பதவி உயர்வு கிடைக்கும்.
- பணியிடத்தில் மேலதிகாரிகள் உங்களுக்கு உரிய அங்கீகாரம் வழங்குவார்கள்.
- கூட்டுத் தொழில் உங்களுக்கு லாபத்தை அளிக்கும்.
- தொழில் ஒப்பந்தம் சார்ந்த ஆவணங்களில் கையொப்பமிடுமுன் கவனம் தேவை.
- வெளிநாட்டு தொழில் வாய்ப்புகள் உங்களை நாடி வரும். அதன் மூலம் நீங்கள் ஆதாயமும் வெற்றியும் பெறுவீர்கள்.
- பங்கு வர்த்தகத்தில் முக்கியமான முடிவுகள் எதையும் இந்த மாதம் எடுக்காதீர்கள். ஏனெனில் அதில் நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது.
- மாணவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும். மாணவர்கள் கவனமுடன் படிப்பார்கள்.
- உயர்கல்வி பயிலும் மாணவர்கள் பல புதிய விஷயங்களை கற்றுக் கொள்வார்கள்.
- உங்கள் ஆரோக்கியம் இந்த மாதம் சிறப்பாக இருக்கும் என்றாலும் மனதில் சிறிது பதட்ட நிலை இருக்கும். உணவு முறையில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

# கடகம்

- உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு மற்றும் தன நிலையில் ஏற்றம் ஏற்படும்.
- வியாபாரத்தில் தன வரவு அதிகரிக்கும். பொருளாதார நிலையில் முன்னேற்றம் இருக்கும்.
- சுயத்தொழில் செய்பவர்கள் தங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள புதிய தொழிலைத் தொடங்குவது ஏற்றத்தை கொடுக்கும்.



- காதல் உறவில் மனஸ்தாபங்கள் உண்டாகலாம். கவனம் தேவை.
- திருமணமான தம்பதிகளிக்கு இடையே இணக்கம் அதிகரிக்கும்.
- குடும்பத்தில் அமைதியும் நல்லிணக்கமும் இருக்கும்.
- ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். ஆன்மீகத்திற்காக பயணம் மேற்கொள்வீர்கள்.
- பொறியியல் படிக்கும் மாணவர்கள் சிறந்த முறையில் தேர்வுகளை எழுதி சிறந்த மதிப்பெண்களைப் பெறுவார்கள்.
- கூட்டுத்தொழிலிலில் நல்ல லாபம் கிடைக்கும்.
- பள்ளியில் பயிலும் மாணவர்கள் கவனச் சிதறல் போன்ற தடைகளையும் தாண்டி கல்வியில் முன்னேறுவார்கள்.
- உடல் ஆரோக்கியம் மேம்படும். வயதானவர்களின் உடல் நிலையில் சிறிது கவனம் தேவை.

# சிம்மம்



- கூட்டுத்தொழில் செய்பவர்களின் வருமானம் அதிகரிக்கும்.
- தொழில் குறித்த முக்கிய முடிவுகளை எடுக்கும் முன்பு அதன் நன்மை தீமைகளை ஆராய்ந்து முடிவு எடுங்கள்.
- திருமணமான தம்பதிகளின் தாம்பத்திய வாழ்வு சிறக்கும். கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை நிலவும். அன்னியோன்யம் பெருகும்.
- உறவினர்கள், நண்பர்கள் என அனைவரிடமும் நல்ல சுமுகமான உறவு நிலை இருக்கும்.
- இந்த மாதம் உங்கள் பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். உங்கள் அன்றாடத் தேவைகளை நீங்கள் எளிதாக சமாளிப்பீர்கள். பணத்தை எதிர்கால நலன் கருதி சேமிப்பீர்கள்.
- மாணவர்கள் கவனச் சிதறலுக்கு ஆட்படுவார்கள். படிப்பில் கவனம் தேவை.
- உங்கள் ஆரோக்கியத்தில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும்.
- சிறுநீரகம் சம்மந்தப்பட்ட உடல் நல பாதிப்பு ஏற்படலாம். போதுமான நீர் உட்கொண்டு இந்த பாதிப்பில் இருந்து தப்பிக்கலாம்.

# கன்னி




- உத்தியோகத்தில் உள்ள அன்பர்கள் இந்த மாதம் பணியில் சில முன்னேற்றங்களைக் காண்பீர்கள்.
- வெளிநாட்டில் உத்தியோகம் தேடுபவர்களுக்கு வெளிநாட்டில் வேலை வாய்ப்பு கிடைக்கப் பெறுவீர்கள்.
- இந்த மாதம் கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். குறிப்பாக வெளிநாடு சம்பந்தப்பட்ட தொழில் புரிபவர்களுக்கு இது சிறந்த பலன்களை அளிக்கும் மாதம் ஆகும்.
- பணப்புழக்கம் குறைவாக இருக்கும் இது உங்கள் மனதில் பதட்டத்தை ஏற்படுத்தும். செலவு செய்வதில் கவனம் தேவை.
- திருமணமான தம்பதிகளுக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்படும். குறிப்பாக பண விசயமாக கருத்து வேறுபாடு எழும்.
- மாணவர்களுக்கு இந்த மாதம் அதிர்ஷ்டகரமான மாதமாக இருக்கும். வெளிநாடு சென்று கல்வி பயில விரும்பும் மாணவர்கள் பெற்றோரின் வழிகாட்டுதலைப் பின்பற்றினால் வெற்றி காண்பார்கள்.
- முறையான உடற்பயிற்சியும் சத்தான உணவும் உங்கள் ஆரோக்கியத்தைக் காக்கும். துரித உணவு வகைகளைத் தவிர்ப்பது நன்மை பயக்கும்.

# துலாம்



- உத்தியோகத்தில் உள்ளவர்கள் கடினமாக உழைப்பதன் மூலமும் சக பணியாளர்களிடம் நல்லுறவு பேணுவதன் மூலமும் பணியிடத்தில் நல்ல பெயரும் புகழும் பெறுவீர்கள். பணியிடத்தில் நீங்கள் உங்கள் பொறுப்புகளை சரிவர நிறைவேற்றுவீர்கள்.
- படைப்புத் துறை மற்றும் அரசுத் துறையில் பணி புரிபவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும்.
- புதிய கடன்கள் எதுவும் வாங்குவது கூடாது. பண விஷயங்கள் குறித்த அவசர முடிவுகள் எதையும் இந்த மாதம் நீங்கள் மேற்கொள்ள வேண்டாம்.
- நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள்.
- மாணவர்கள் சிறப்பாகச் செயல்படுவார்கள். பதட்டம் ஏதும் இன்றி காணப்படுவார்கள். தெளிவான மனதுடன் கடினமாக முயற்சி மேற்கொள்வார்கள்.
- இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். என்றாலும் ஒற்றைத் தலைவலி போன்ற சிறு சிறு பிரச்சினைகள் இருக்கும். உடற்பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

# விருச்சிகம்




- உத்தியோகத்தில் உள்ளவர்களின் கடின உழைபுற்கு அங்கீகாரம் கிடைக்கும். உங்கள் ஊரில் பணி புரிவதை விட வெளியூர் சென்று பணி புரிவதன் மூலம் ஆதாயம் பெறுவீர்கள். உங்கள் வசதிகள் யாவும் பெருகும்.
- உத்தியோகத்தில் நீங்கள் சாதுரியமாக நடந்து கொண்டால் பதவி உயர்வு மற்றும் ஊதிய உயர்வு கிடைக்கப் பெறுவீர்கள்.
- அச்சுத் துறை, வணிகம், ஐடி போன்ற துறைகளில் இருந்தால் பணியில் பதட்டமான நிலை இருக்கும்.
- திருமணமான தம்பதிகள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து உண்மையாகவும் அனுசரணையாகவும் நடந்து கொள்வார்கள்.
- மாணவர்கள் சென்ற மாதத்தை விட இந்த மாதம் கவனமுடன் செயல்படுவார்கள். மாணவர்களிடம் தன்னம்பிக்கை குறைந்து காணப்படும்.
- கல்லூரி முடித்த மாணவர்கள் ஆராய்ச்சி படிப்புகளை மேற்கொள்வார்கள்.
- உங்கள் ஆரோக்கியத்தில் ஏற்ற இறக்க நிலை இருக்கும். சிறிது உடல் உபாதைகள் உங்களை வருத்தினாலும் நீங்கள் சமாளித்து முன்னேறுவீர்கள்.

# தனுசு



- உத்தியோகத்தில் உள்ளவர்கள் பணியில் சிறந்து விளங்க கடினமாக உழைக்க வேண்டும்.
- மருத்துவத் தொழில், சட்டம் மற்றும் எழுத்துத் துறையில் இருப்பவர்கள் இந்த மாதம் கணிசமாக பணம் சம்பாதிப்பார்கள்.
- வியாபாரம் செய்பவர்கள் தங்கள் விற்பனை அதிகரிக்கக் காண்பார்கள்.
- சுய தொழில் செய்பவர்கள் அதிக லாபத்தை ஈட்டுவார்கள்.
- வெளிநாட்டு வியாபாரம் மற்றும் ஏற்றுமதி இறக்குமதி தொழிலில் இருப்பவர்கள் தொழில் நிமித்தமாக வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிட்டும்.
- கணவன் மனைவி உறவில் ஒற்றுமை கூடும். உங்கள் வாழ்க்கைத் துணைக்கென நேரம் ஒதுக்கி அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.
- கல்வி பயிலும் மாணவர்கள் கடுமையாக உழைத்துப் படிக்க வேண்டும்.
- இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் சீராக இருக்க வாய்ப்பில்லை. எனவே உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சோம்பலும் களைப்பும் உங்களை வாட்டும்.

# மகரம்



- உத்தியோகத்தில் சிறப்பாகப் பணியாற்றுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள்.
  - சுய தொழில் செய்பவர்கள் ஒரே தொழிலில் முதலீடு செய்வது கூடாது. பிரித்து முதலீடு செய்வதன் மூலம் உங்கள் தொழில் விரிவதற்கான வாய்ப்பு உள்ளது.
  - வெளிநாட்டு தொடர்பான தொழில் நடத்துபவர்களும் சிறந்த ஆதாயம் காண்பார்கள்.
- கணவன் மனைவி உறவில் ஒற்றுமை அதிகாரிக்கும். தாம்பத்திய உறவில் நல்லிணக்கம் கூடும்.
- வீட்டு பெரியவர்களிடம் கருத்து மோதல்கள் வரலாம். வாக்கில் கவனம் தேவை.
- தாயாருக்கு உடல் நல குறைவு ஏற்படலாம். கவனம் தேவை.
- மாணவர்கள் இந்த மாதம் கல்வியில் பளிச்சிடுவார்கள். சிலருக்கு கல்வி உதவிப் பணம் கிடைக்கும். மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் செயல்படுவார்கள். இந்த மாதம் மாணவர்களுக்கு நம்பிக்கை தரும் மாதமாக இருக்கும்.
- உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு பிரச்சினைகள் வந்து போகும். குடல் சம்மந்தப்பட்ட பிரச்கனைகள் வரலாம். ஆரோக்கிய உணவு உண்பதன் மூலமாக வயிறு சம்மந்தப்பட்ட பிரச்சனைகள் வராமல் தடுக்கலாம்.

# கும்பம்



- உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வெளியிடங்களுக்கு சென்று வேலை பார்க்க வேண்டிய சூழல் ஏற்பட வாய்ப்புள்ளது.
- உத்தியோகம் சம்மந்தமாக அலைச்சல் அதிகரிக்கும்.
- புதிய தொழிலுக்காக அதிக முதலீடுகளை செய்வீர்கள்.
- பழைய தொழிலை விரிவாக்கம் செய்வதற்கு ஏற்ற மாதம் ஆகும்.
- கூட்டுத் தொழிலில் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம்.
- கணவன் மனைவிக்கு இடையே இணக்கம் கூடும்.
- குடும்பச் சூழல் மகிழ்ச்சி தரும் வகையில் இருக்கும். பணம் சம்மந்தப்பட்ட விஷயங்கள் குறித்து இதுவரை குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் யாவும் சீராகும்.
- புதிய வீடு மாறுவதற்கு இந்த மாதம் சிறந்த மாதமாகும்.
- பழைய சொத்துக்கள் அல்லது பழைய வண்டி வாகனங்கள் வாங்கும் வாய்ப்பு உள்ளது.

# மீனம்



- வேளையில் உள்ள தங்களின் எதிர் கால திட்டம் குறித்து உங்கள் மேலதிகாரிகளுடன் கலந்து ஆலோசிப்பீர்கள்.
- தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும். தொழிலில் லாபம் அதிகரிக்கும்.
- இந்த மாதம் நிலம் அல்லது சொத்து வாங்கும் யோகம் உண்டு. கடன் வேண்டி விண்ணப்பித்திருந்தால் அது கிட்டும்.
- இந்த மாதம் ஆடம்பர செலவுகளை தவிர்த்து அத்தியாவசிய செலவுகளை மேற்கொள்வது நன்மை பயக்கும்.
- உங்கள் கடந்த கால முதலீடுகளின் மூலம் நீங்கள் லாபம் பெறுவீர்கள். உங்கள் பணப்புழக்கம் கணிசமாக அதிகரிக்கும்.
- கணவன் மனைவி உறவில் அன்யோன்யம் கூடும்.
- உடன்பிறந்தவர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. கவனம் தேவை.
- மாணவர்கள், ஆசிரியர் மற்றும் பெற்றோரின் ஆலோசனைகளைக் கேட்பதன் மூலம் சிறந்த பலன்களைப் பெறுவார்கள்.
- உயர் கல்வி படித்து முடிக்கும் நிலையில் இருக்கும் மாணவர்கள் வேலை கிடைக்கப் பெறுவீர்கள்.